திராவிடர் இனத்தின் தோற்றம்

(ஒரு மறு ஆய்வு)

முனைவர் க.த.திருநாவுக்கரசு

M.A., (Tamil), M.A., (History), M.Litt., Dip.Ing., Phd.,

வெளியீடு

மணியகம்

3/30 , இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த்தோட்டம், கோட்டூர்புரம்,
சென்னை 600085.
9444453737

திராவிடர் இனத்தின் தோற்றம்

(ஒரு மறு ஆய்வு)

முனைவர்
க. த. திருநாவுக்கரசு

வெளியீடு
மணியகம்
3/30, இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த் தோட்டம், கோட்டூர்புரம்,
சென்னை–600 085
9444453737

நூல் விவர அட்டவணை

தலைப்பு	:	திராவிடர் இனத்தின் தோற்றம் (ஒரு மறு ஆய்வு)
பொருள்	:	ஆய்வுக் கட்டுரை
ஆசிரியர்	:	முனைவர் க.த.திருநாவுக்கரசு
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	இரண்டாம் பதிப்பு –அக்டோபர் 2024 முதற்பதிப்பு – ஜூலை, 1971 தமிழாய்வு –தொகுதி–2 இல் வெளிவந்த கட்டுரை
நூலின் அளவு	:	1/8 டெமி
பக்கங்கள்	:	iv+ 84 = 88
தாள்	:	80 GSM Maplitho
எழுத்துரு	:	Tau–Marutham, Pt.11
அச்சிட்டோர்	:	அரசு ஆர்ட்ஸ் 78, சீனிவாசபெருமாள் சன்னதி முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை –600 014 044 - 28351101, 28588056 E-mail : arasuarts@gmail.com www.arasuarts.com
வெளியீடு	:	மணியகம் பதிப்பகம் 3/30, இரண்டாவது பிரதான சாலை, கோட்டூர் தோட்டம், கோட்டூர்புரம் சென்னை – 600 085 9444453737, tambalavanan@gmail.com
உரிமை	:	பதிப்பக்கத்திற்கே
விலை	:	இலவச வெளியீடு
எண்ணிக்கை	:	25 புத்தகங்கள்
ISBN	:	978–93–48345–88–2

உள்ளடக்கம்

இந்தியாவில் திராவிடர் இனம் 1.1.,–மறு ஆய்விற்குரிய காரணம் 1.2– இனம் – சொல்லும் பொருளும் 1.3–8– இனப் பாகுபாடு 1.9–10– (1) உடற்கூற்று அமைப்பு வழி இனப்பாகுபாடு 1.11–14– (2) மொழி வழி இனப்பாகுபாடு 1.15–19 – திராவிடர் – சொல்லும் பொருளும் 1. 20–26–சமஸ்கிருதத்தில் திராவிடம் 1.27–37– தமிழ்நாட்டு வழக்கு 1,38–40– வெளிநாட்டாரின் குறிப்பு 1.41–44.

திராவிடர் இனப்பாகுபாடு 1.45–48– திராவிடர் **இனத்தின் தோற்றம்** 1.49–54–(அ) வெளிநாட்டிலிருந்து வந்தவர் 1.55–(1) எகிப்திலிருந்து வந்தவர் 1.56–57– (2) நடு ஆசியாவி லிருந்து வந்தவர் 1.58–(3) மேற்காசியாவிலிருந்து வந்தவர் 1.59–61– (4) நடுநிலக் கடற்பகுதியிலிருந்து வந்தவர் –(1) கென்னடியின் கருத்து 1.62–(2) சிலேட்டரின் துணிவு 1.63–(3) எய்மெண்டார்ப்பின் புதிய விளக்கம் 1.64–69–(4) மொழியியல் அறிஞரின் நம்பிக்கை 1.70–(5) பல்லமைப்பு உணர்த்தும் உண்மை 1.71– (6) மதிப்பீடு 1.72 – 75 (7) ஹாலின் புத்தொளி 1.76–78–(8) எய்மெண்டார்ப் கருத்துகளின் வன்மை மென்மைகள் 1.79–85–(ஆ) **இந்தியாவின் பழங்குடிமக்களே திராவிடர்** 1.86–(1) லெமூரியா 1.87–95–(2) கடல்கோளும் முச்சங்க வரலாறும் 1.96–107–(3) புத்தொளி 1.108–(4) புது விளக்கம் 1.109–115.

28–7–1971–ல் நடைபெற்ற தமிழ்த்துறை ஆசிரியர் மாணவர் கருத்தரங்கக் கட்டுரை.

திராவிடர் இனத்தின் தோற்றம்

(ஒரு மறு ஆய்வு)

இந்தியாவில் 'திராவிடர்' இனம்

1.1 இந்தியாவின் மக்கள் தொகைக் கணிப்பாளர் இந்தியாவில் மூன்று முதன்மையான இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்து வருவதாகக் கருதுகின்றனர்.[1] அவற்றுள் திராவிடர் இனம் தென்னிந்தியாவில் சிறப்பாகவும், நடு இந்தியாவிலும் வட இந்தியாவிலும் பரவலாகவும் வாழ்ந்து வருவதாக அக்கணிப்பாளர் கூறுகின்றனர். இத் திராவிட இனத்தின் தோற்றத்தைப் பற்றிக் கடந்த நூறு ஆண்டுகளில் பல்வேறு கருத்துகளும் கொள்கைகளும் அறிஞர் பெருமக்களாலும், ஆராய்ச்சியாளர்களாலும் அவ்வப்போது எடுத்தியம்பப் பெற்றுள்ளன.

மறு ஆய்விற்குரிய காரணம்

1.2 இன்று அறிவியல் மிக விரைவாக வளர்ச்சியடைந்து வருகிறது. அதன் பயனாக அறிவாராய்ச்சித் துறையில் பல வகையான மாற்றங்களும் முன்னேற்றங்களும் உண்டாகியுள்ளன. திராவிடர் இனத்தின் தோற்றம் பற்றி அண்மைக்காலத்தில் ஆராய்ந்த அறிஞர்களுள் பெரும்பாலோர், தத்தம் விருப்பு வெறுப்புகளுக்கு இரையாகியுள்ளனர். அதனால், கருத்து வேறுபாடுகளும் மாறுபாடுகளும், மோதல்களும் தாக்குதல்களும் தோன்றியுள்ளன. இக்கருத்துக் குழப்பத்திற்கு இடையே மறைந்து கிடக்கும் உண்மையைக் கண்டறிய முயல்வதே இவ்வாய்வுரையின் நோக்கமாகும். இந்நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டே, 'திராவிடர் இனத்தின் தோற்றம் ' இங்கு மறு ஆய்வு செய்யப் பெறுகிறது.

---

1 இந்தியாவில் உள்ள மக்களைத் திராவிடர், இந்தோ–ஆரியர், மங்கோலியர் என்னும் மூவகை இனங்களைச் சேர்ந்தவர்களாக முதன்முதல் பாகுபடுத்திக்கூறியவர் எச்.எச்.ரிசிலி (H. H. Risley) என்பவராவர்.
காண்க : The People of India, Thacker Spink, Calcutta, 1915. pp. 12–18.

'இனம்'– சொல்லும் பொருளும்

1.3 'இனம்' என்னும் சொல்லிற்குத் தமிழில் வருக்கம், குலம், சுற்றம், நிரை, ஒப்பு[2] என்பன போன்ற பல பொருள்கள் வழங்கிவருகின்றன. இவற்றுள் 'வருக்கம்' என்ற பொருளிலேயே, நாம் இங்கு 'இனம்' என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறோம். ஆங்கிலத்தில் வழங்கும் 'ரேஸ்' (Race) என்னும் சொல்லிற்குரிய பல்வேறு பொருள்களுள், ஒரு மூதாதையரின் கால்வழியில் தோன்றிப் பொதுவான பண்பு களை மரபுவழியாகப் பெற்றுள்ள மக்களின் பகுதி[3] என்னும் பொருளே சிறப்புடையது. இப்பொருளுடைய 'ரேஸ்' என்னும் ஆங்கிலச் சொல்லிற்கு நேரான தமிழ்ச் சொல்லாக இங்கு 'இனம்' என்னும் சொல்லை நாம் கையாளுகிறோம். குறிப்பிட்ட சில பண்புகளை அடிப்படையாகக்கொண்டு, உலகத்தில் வாழும் மக்களைப் பல்வேறு இனங்களாகப் பாகுபடுத்திக் கூறும் மரபு, கடந்த பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது. "இனம் என்பது என்ன?" என்னும் வினாவிற்குத் தெளிவாக விடை கூறுவதும், 'இதுதான் இனம் என்னும் சொல்லிற்குப் பொருள்' என்று வரையறுத்துக் கூறுவதும் எளிய செயலன்று.

1.4 பொருளாழம் மிக்க பல்வேறு சொற்களைப் போன்றே, 'இனம்' என்னும் சொல்லும் பல பொருள்பட எடுத்தாளப்பெறுகிறது. சில சமயங்களில் 'நாட்டு மக்கள்' என்னும் பொருள்படுமாறு இச்சொல் கையாளப்படுகிறது. பிரெஞ்சு இனம், சீன இனம், அமெரிக்க இனம் என்றெல்லாம் பேசப்படுவதை நாம் கேட்கின்றோம். ஒரே மொழி பேசும் மக்களை இதே சொல்லால் குறிப்பிடுவதையும் நாம் காணுகின்றோம். ஜெர்மானிய இனத்தவர், ஆரிய இனத்தவர்,

---

2 Tamil Lexicon, Vol. I. University of Madras, 1936, P. 870.

3 The descendants of a common ancestor, especially, those who inherit a common set of characteristics; such a set of descendants, narrower than a species"
–Chamber's Twentieth Century Dictionary, G. B., 1960. P. 907.

செமிடிக் இனத்தவர் என்று குறிக்கும் வழக்கமும் இருந்துவருகிறது. ஒரு பொது இடத்தில் வாழ்ந்தாலும், பொதுவான வரலாறு, மரபு, பொதுமொழி, சமயம், பொதுவான சமூக, அரசியல், பொருளாதார நிறுவனங்கள் ஆகியவற்றால் கட்டுண்டு செயற்படும் மக்கள் கூட்டத்தையே 'இனம்' என்னும் பெயரால் அறிஞர் சுட்டுவதைக் காணுகின்றோம். இப்பொருளிலேயே பண்டைக் கிரேக்கரும், யூதரும் தனி இனத்தவராகக் கருதப்பெற்றனர். இவ்வாறு செய்யப் பெறும் பாகுபாடெல்லாம் தவறானவை. இவை நாடு, மொழி, பண்பாடு, பழக்கவழக்கங்கள் போன்றவற்றை அளவுகோலாகக்கொண்டு செய்யப் பெறுவன; அறிவியல் ஆராய்ச்சி முறைக்குப் பொருந்தி வருவனவல்ல. இவை காலந்தோறும் சூழ்நிலைக்கேற்ப மாறக்கூடிய இயல்புடையன என்று இவற்றைப் புறக்கணிப்பாரும் உண்டு. ஆனால், இனத்தின் உண்மையான பொருள், மனித இனத்தின் உடலுறுப்புகளின் அமைப்பைப் பொறுத்தது என்பர். 'உயிரின மரபுரிமை மூலம் வழிவழியாகக் கொண்டுசெல்லக்கூடிய, பொதுவான, கண்டறியத்தக்க உடற்கூற்றுப் பண்புகளை உடைய மனிதர்களின் சேர்க்கையே இனம்' என்று கூறுவதே அறிவியல் ஆராய்ச்சிக்குப் பொருந்தி வரக் கூடிய கருத்தாகும்.

1.5 இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, 'இனம் என்பது ஒரு சமூகப் புனைந்துரைக் கதை' (Social Myth) என்ற கருத்து அறிஞர் பெருமக்களிடத்துப் பரவலாக நிலவி வருகிறது. மனித. சமூகவியற் கண்ணோட்டத்தில் மனிதனையும் அவனை ஒன்று சேர்க்கும் சமூகத்தையும், அவனுடைய பண்பாட்டையும், இவை போன்ற பிறவற்றின் இயல்புகளையும் புரிந்துகொள்ள அது உதவ முடியாது என்னும் கருத்து சமூகவியலாரால் பெரிதும் போற்றப்பட்டுவருகிறது. யுனஸ்கோ (UNESCO) ஆதரவில் பாரிஸ் நகரில் கூடிய அறிவியல் அறிஞர்கள், "சமூக நடைமுறை வாழ்க்கையில் 'இனம்' என்பது ஓர் உயிரியற் கருத்து என்பதைவிட, ஒரு சமூகப் புனைந்துரைக் கதை

(Social Myth) என்பது பொருந்தும்"[4] என்ற முடிவிற்கு வந்தனர்.

1.6 இரண்டாவது உலகப் போர் உண்டானதற்குரிய மூல காரணம் ஜெர்மானியருடைய இன மையக் கொள்கையேயாகும் (Ethnocentrism). 'ஆரிய இனமே உலகில் சிறந்தது; அவர்களே உலகை ஆளத்தகுதியுடையவர்கள்" என்ற கோட்பாட்டை ஹிட்லர் நடைமுறையில் கடைப்பிடித்தமையால் மனித இனத்திற்கு உண்டான இன்னல்களையும் இடையூறுகளையும், கேடுகளையும் கெடுதல்களையும் அளவிட்டுரைக்க முடியாது. இதனால், அறிஞர்களிடையே இனவெறிக்குக் காரணமான 'இனக்கொள்கை'யின் மீது வெறுப்புண்டாயிற்று. மனித இனம் மண்ணில் நல்லவண்ணம் வாழவேண்டுமானால் குறுகிய இனப்பற்றுக்கு இடந்தரலாகாது என்று அவர்கள் கருதுகின்றனர். இதன் விளைவாக, 'இனம் என்பது ஒரு சமூகப் புனைந்துரைக் கதை ' என்னும் கோட்பாடு தோன்றலாயிற்று. இனம் என்ற கருத்து தவறான பொருள்களை இழிவாக அளித்ததனால், அறிவியல் துறைகளிலிருந்தே அதை கைவிடவேண்டிய நெருக்கடி உண்டாகி விட்டது"[5] என்று ஆஷ்லி மாண்டேகு என்ற மானிடவியல் வல்லுநர் கூறுகின்றார்.

1.7 மேலும், அறிவியல் வளர்ச்சியால் உண்டான முன்னேற்றம் பல்வேறு நாட்டுமக்களிடையேயும் பல்வேறு இனத்தவரிடையேயும் நெருக்கமான தொடர்பினையும், கலப்பினையும் உண்டாக்கியிருக்கிறது. இதனால், இனப்பாகுபாடே அழிந்து விட்டது என்று சில சமூகவியல் ஆராய்ச்சியாளர் நம்புகின்றனர். அறிவியல் வளர்ச்சியால் மனித இனம், இடத்தாலும் காலத்தாலும் உண்டாகக்கூடிய இடையூறுகளை வென்று வருகிறது என்பது உண்மை. ஆனால், பல்வேறு நாட்டு மக்களுக்கு இடையேயுள்ள

---

4 UNESCO 'Courier', July August, 1950; P. 8.

5 Ashley Montague, W. F.: Man's Most Dangerous Myth: Fallacy of Race', Columbia University, The N. Y; 1947., P. 35.

பண்பாட்டு வேற்றுமைகளோ, பல்வேறு இனங்களுக்கு இடையேயுள்ள இனப்பண்புக் கூறுகளோ அழிந்தொழிந்து விட்டன என்று நாம் சொல்ல முடியாது.

1.8 "நிறம் அல்லது வடிவ அமைப்பைப் போன்ற முற்போக்கான அல்லது குறிப்பிட்ட ஒரு சில பண்புகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நாம் மனித இனத்தைப் பல்வேறு இனங்களாகப் பாகுபடுத்திக் கூற முடியாது. வெறும் உடற்கூற்று இயல்புகளை நிலைக்களனாகக் கொண்டு உலக மக்களைப் பல குழுக்களாகப் பிரிப்பது பொருத்தமற்றதாகும். இவ்வடிப்படையில் பாகுபாடு செய்தால் ஜப்பானில் வாழும் வெண்ணிறத் தோலுடைய ஐனூ (Ainu)க்களை நாம் தவறுதலாக வெள்ளையர் இனத்தோடு தொடர்புபடுத்தியுரைக்க நேரிடும். மேலும், கறுப்புநிற இந்துக்களை காகேசிய (Caucasia) இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்று நீக்கிவிட நேரிடும். ஆனால், உண்மையில் அவர்கள் காகேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு ஆற்றல்மிக்க சான்றுகள் பல உள்ளன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது"[6] என்பது சமூகவியல் அறிஞர்களிடையே பொதுவாக நிலவிவரும் கருத்தாகும்.

இனப்பாகுபாடு

1.9 இக் கூற்றினை முற்றிலும் உண்மை என்று நாம் ஒப்புக் கொள்ள இயலாது. குரோபர் (Kroeber) போன்ற மானிடவியல் நூலார் (Anthropologists), 'இனம் என்பது உயிரியல் ஆராய்ச்சிக்குகந்த கருத்தாகும். அது மரபுவழி ஒன்றுபட்டு வாழும் ஒரு குழுவினைக் குறிக்கிறது. மனித இனத்தினுடைய வளர்ச்சியின் ஒரு வகையை அது சுட்டுகிறது. ஆனால், 'இனம்' என்பதைச் சமூகப் பண்பாட்டுத் துறைக்கருத்தாகக் கொள்ளக்கூடாது. சிறப்பாகச் சமூகப் பண்பாட்டுத்துறையினர்

---

6. William F. Ogburn and Meyer F. Nimkoff: A Hand book of Sociology, Routledge & Kegan Paul Ltd., London, 1964. P. 62.

அச்சொல்லைக் கையாளாமல் இருப்பது நல்லது''[7] என்று கருதுகின்றனர்.

1.10 எனவே, மனித இனத்தின் இயல்பினையும் பண்பினையும் ஆராய்கின்றவர்கள் 'இனம்' என்னும் சொல்லால் சுட்டப்படும் கருத்தினையும், இனப்பாகுபாட்டையும் அடிப்படையாகக் கொண்டே ஆராய்ச்சி செய்ய வேண்டியவர்களாக உள்ளார்கள்.

(1) உடற்கூற்று அமைப்பு வழி இனப்பாகுபாடு

1.11 மனித இனம் முழுவதும் ஒன்றே என்ற கருத்தை எல்லா அறிவியலாளரும் ஒப்புக்கொள்கின்றனர். 'ஹோமோ சேபியன்' (Homo sapiens) என்னும் ஒரே உயிரினத்தின்பாற் பட்டவர்கள்தாம் மனிதர்கள் எல்லாரும் என்னும் கருத்தை ஏற்காதவர்கள் இல்லை. இப்பொதுவான மூதாதையரிடமிருந்தே எல்லா வகையான மனிதர்களும் தோன்றினர். மனித இனத்தின் பல்வேறு குழுக்களிடையே காணப்படுகின்ற வேறுபாடுகளெல்லாம் மாறுபாடுகள், தனித்தியங்குதல், இயற்கைத் தேர்வு, கலப்பு உயிரியாக்கல், மரபுவழி இனப்பண்புகளைக் கட்டுப்படுத்துகின்ற சக்திகளின் தேர்வுகள், அவற்றின் அமைப்பில் நிகழும் மாற்றங்கள் போன்ற பல்வேறு கூர்தலறக் காரணிகளால்தான் ஏற்படுகின்றன.[8]

1.12 பொதுவாக இனப்பாகுபாட்டைப்பற்றி ஆராய்கின்ற பொழுது நமக்குச் சில உண்மைகள் புலனாகின்றன. மானிட இயல் நூலார், 'இனம்' என்னும் சொல்லை விலங்கியல் (Zoological) சார்பு பொருளில் கையாளுகின்றனர்[9] என்பது புலனாகின்றது. உடற்கூற்று அமைப்பில் காணப்பெறும் முனைப்பான சில இயல்புகளை அடிப்படையாகக்கொண்டு பல்வேறு இனங்களாக அவர்கள் மக்களினத்தைப் பாகுபாடு செய்துள்ளனர். பண்பாட்டின் முன்னேற்றத்தை முடிவு

---

7. Kroeber, A. L.: Anthropology, Harcourt, Brace & Co., N. Y. 1948. P. 124.
8. UNESCO, Courier, July–August, 1950, P. 8.
9. Shapiro, Harry L.: Collier's Encyclopaedia Vol. 16; N. Y. 1955 P.532.

செய்யும் கூறாக இனம் அமையவில்லை என்பது இரண்டாவது உண்மையாகும். எனினும், மனிதனுடைய வியத்தகு ஆற்றல்களும், சூழ்நிலைக்கேற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் திறனும் இப்பண்பில் ஊறியனவாக உள்ளன. அதனால் இனப்பண்பு என்பது பண்பாட்டு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகிறது.

1.13 தோலின் நிறம் அல்லது வண்ணப்பொருள், மண்டை ஓட்டின் அமைப்பு, உடற்கட்டு, கண்மணியின் நிறம், உதடுகளின் அமைப்பு, முன் வந்த தாடைகளின் அமைப்பு, சுருண்ட மயிர், வழவழப்பான மயிர், அலையலையான தலைமுடி போன்ற பல திறப்பட்ட மயிரின் தன்மைகள் ஆகிய பல்வேறு உடற்கூற்றுப் பண்புகளைக் கொண்டு இனப்பாகுபாடு செய்யப்பெறுகிறது.

1.14 மனிதனுடைய விதியை வகுப்பதில் மொழி, நாடு ஆகியவற்றைவிட இனம் மிக அதிகமான பங்கு பெற்றிருக்கிறது. 'இனம்' என்பது மரபு வழிப்பண்பை உள்ளடக்கியிருக்கிறது. மரபு வழிப்பண்பு அரசையும் அரசியலையும் உருவாக்கக் காரணமாயிருந்த ஒழுக்க சமூக அறிவுப்பண்புகளைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது என்பது இங்குக் கருதத்தக்கது.

(2) மொழி வழி இனப்பாகுபாடு

1.15 அண்மைக் காலத்து ஆராய்ச்சியாளர்களுள் சிலர், மனித குலத்தை அவர்கள் பேசும் மொழியினை அடிப்படையாகக் கொண்டு மொழிவழி இனங்களாகப் பாகுபாடு செய்வதே சாலச் சிறந்த முறை என்று கூறிவருகின்றனர். இத்தகைய பாகுபாட்டால், உலகில் இனச் செருக்கிற்கோ, இனக்கொடுமைக்கோ இடமில்லாமல் போகும் என்று அவர்கள் நம்புகின்றனர். இதற்குச் சான்றாக 'யுனஸ்கோ' (UNESCO) வின் ஆதரவில் வெளியிடப் பெற்றுள்ள 'இந்தியப் பண்பாட்டின் வரலாற்று ஆராய்ச்சி' (Studies in the Cultural History of India) நூலில் காணப்படும் கருத்து ஒன்றைக் காட்டலாம்.

1.16 'ஆரியன்,' 'திராவிடன் ' என்னும் உண்மையில் மொழிகளைக் குறிக்கும் பெயர்களாகும் என்பதை நமக்கு நாம் நினைவூட்டிக் கொள்ளுவது நல்லது. இச்சொற்களை இனவழி அமைந்த மக்கள் குழுக்களைக் குறிப்பிடப் பயன்படுத்துவது தவறாகும். உலகின் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்ததைப் போன்றே இந்தியாவிலும் கடந்த பல நூற்றாண்டுகளாக இனங்களின் கலப்புப் பேரளவில் நடைபெற்றிருக்கிறது. எனவே, மொழியையும் இனத்தையும் ஒன்றுபடுத்திக் காட்ட இயலாது." [10]

1.17 இக் கருத்தினை ஊன்றி நோக்குகின்ற பொழுது நமக்குச் சில ஐயங்கள் எழுகின்றன. 'குறிப்பிட்ட ஒரு மொழியைப் பேசுகின்ற காரணத்தால் அம்மொழியைப் பேசுகின்ற மக்கள் அனைவரும் ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறுவது புதிதாக வகுத்துக் கொண்ட ஒரு கொள்கையா? அல்லது அறிஞரிடைய இக்கருத்து நெடுங்காலமாக நின்று நிலவி வருகிறதா?" என்பது ஓர் ஐயம். 'குறிப்பிட்ட ஓர் இடத்தில் வாழும் மக்கள் பொதுவாக ஒரு மொழியைப் பேசுவதால், அவர்கள் அனைவரையும் ஓர் இனத்தைச் சேர்ந்த மக்கள் என்று கூறுவது பொருந்துமா? பலூசிஸ்தானத்தில் வாழும் மக்களுள் ஒரு சிறு பிரிவினர் 'பிராகுவி' என்னும் திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மொழியைப் பேசுவதால் அவர்கள் திராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்களாகிவிட முடியுமா?" என்பன போன்ற ஐயப்பாடுகள் உண்டாகின்றன.

1.18 உலகத்தில் பேசப்பெறுகின்ற மொழிகளை ஆராய்ந்து மொழியியலார், அவற்றைப் பல குடும்பங்களாகப் பாகுபாடு செய்துள்ளனர். இப்பாகுபாடு மொழிகளை வகைப்படுத்தப் பொருந்துமே ஒழிய, மனித இனத்தை உடற்கூற்று அமைப்பிலோ, வாழுகின்ற நாட்டின் அடிப்படையிலோ

10 Guy S. Metraux and Francois Crouzet (Ed.): Studies in the Cultural History of India (UNESCO); Shiva Lal Agarwala & Co., Agra; 1966. P. 167.

பாகுபாடு செய்வதற்குப் பொருந்தாது. மொழி ஆராய்ச்சியின வசதிக்காக வகுத்துக் கொள்ளப் பெற்ற விதிமுறைகளை இன ஆராய்ச்சியில் கொண்டு வந்து பொருத்திக் காட்டுவது ஆராய்ச்சி முறையாகாது. ஒவ்வோர் ஆராய்ச்சித் துறைக்கும் தனிச்சிறப்பு வாய்ந்த அடிப்படை விதிகளும் கோட்பாடுகளும் உள்ளன. அவ்வவற்றிற்குரிய வரையறுக்கப்பட்ட நிலைக்களன்களில் அவற்றிற்குரிய விதிகளைப்பயன்படுத்த வேண்டுமேயொழிய, பிற துறைகளில் கொண்டுவந்து புகுத்திக் குழப்புவது பொருளற்ற செயலாகும். ஆனால், நம் நாட்டில் சிலர் இன்று இத்தவற்றைச் செய்துவருகின்றனர். அவர்கள் கருத்து பொருத்தமற்றது என்பதற்குப் 'பிராகுவி' மொழி பேசும் மக்களே போதிய சான்றாக உள்ளனர். அவர்களை இந்தியாவில் வாழும் திராவிட இன மக்களோடு வேறெவ்வகையிலும் நாம் தொடர்புபடுத்தவே முடியாது.

1.19 இனம் என்பது, மொழி என்னும் சொல்லிற்குரிய பொருளை உணர்த்தும் மாற்றுச்சொல்லாகாது. ஆனால், வரலாற்று நூல் தொடக்கத்திற்கு முன்பு குறிப்பிட்ட ஒரு நிலப்பரப்பில் வாழ்ந்த அல்லது குறிப்பிட்ட ஒரு குழுவைச் சேர்ந்த மக்களிடத்தில் ஒரு மொழி தனிப்பண்புகள் உடையதாகச் சிறப்புற்று விளங்குமானால், அது அம்மக்களுடைய பண்பாட்டை வெளிப்படுத்தும் கருவிகளுள் முதன்மையிடம் பெறும். அந்நிலையில் இனத்திற்கும் மொழிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டாகலாம். ஒரு குழுவைச் சேர்ந்த மக்களிடமிருந்து மற்றொரு குழுவைச் சேர்ந்த மக்களிடத்து எளிதில் சென்று பரவக்கூடிய இயல்புடையதாய் இருப்பது மொழி. எனவே, பண்பாட்டை வெளிப்படுத்த உதவும் கருவிகளுள் இரண்டாம் நிலையினதாகவே அது செயல்படுகிறது என்பதை நாம் மறத்தலாகாது.

திராவிடர் – சொல்லும் பொருளும்

1.20 'திராவிடர் ' என்னும் சொல்லின் பொருள் என்ன? அது தமிழ்ச் சொல்லா? அல்லது பிறமொழிச் சொல்லா? என்னும் வினாக்கள் ஆராய்ச்சியாளர்களுடைய கருத்தினைக் கவர்ந்துள்ளன.

1.21 'திராவிடர்' என்னும் சொல், சமஸ்கிருத மொழிச் சொல் என்பது கால்டுவெல்லின் கருத்தாகும்.[11] 'த்ர்' என்னும் வேர்ச்சொல்லோடு 'விட் ' என்னும் விகுதி சேர்ந்து 'திராவிட்' என்னும் வடசொல் அமைந்ததாக அவர் கூறுவார். 'த்ர்' என்னும் பகுதிக்கு 'ஓடு' என்றும், 'விட்' எனும் விகுதிக்குச் 'சிறு துண்டு' என்றும் பொருள்கொண்டு, 'ஓடிப்போனவர்கள் வாழும் சிறு நிலப்பரப்பு' என்று அதற்கு ஒருசாரார் விளக்கந்தருவர்.[12] மற்றொரு சாரார்,' விரட்டப்பட்டவர் வாழும் பகுதி' என்றும் பொருள் கூறுவர். இப் பொருள், "பகைமையின் காரணமாகத் தோன்றியிருக்க வேண்டும் . தமிழ் என்பதே இனிமை. எனவே, 'திராவிடம் தமிழாகாது"[13] என்று மறுப்பர் ரா. இராகவையங்கார். பேராசிரியர் எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை 'திருவிடம் ' (திரு+இடம்) என்னும் சொல்லே 'திராவிடம் ' என்று வடமொழியாளர்களால் திரித்து வழங்கப்பெற்றது என்று 'தமிழ் இந்தியா' (Tamil India) என்னும் ஆங்கில நூலில் (பக். 6) விளக்கியுள்ளார்.

---

11. Caldwell, R.: A Comparative Grammar of the Dravidian Languages, Univ. of Madras, 1956. p. 9.
12. Srinivasa Aiyangar, M.: The Tamil Studies, Madras, 1914., p. 4.
13. இராகவையங்கார், ரா.: தமிழ் மொழி வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, 1943., பக். 16.
'திராவிடர்' என்னும் சொல்லிற்குத் தமிழரிடத்து அழுக்காறு கொண்டோர் கூறும் பொருளையே அடிப்படையாகக் கொண்டு, 'தீவினையைத் துரத்துவது' என்னும் பொருளில், 'திராவிடம்' என்னும் சொல்லைச் சிவஞான முனிவர் பயன்படுத்தியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.
"எவ்வினையும் ஒப்புதலால் திரவிடம் என் றியல்பாடை" (காஞ்சிப்...தழுவக். 243).

1.22 திருத்தந்தை ஈராசுப் (Father Heras) பாதிரியார் 'கடலின் குழந்தைகள்' என்று பொருள்படும் 'திரைமிலர்' என்னும் சொல் திரிந்து திரமிளர், திரமிடர், திராவிடர் என்ற வடிவங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பதை உலகமொழிகள் பலவற்றிலிருந்து சான்றுகள் தந்து நிறுவ முயன்றுள்ளார். அதன் சுருக்கத்தைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்:

பண்டைக் கால இந்தியரின் பழைய பெயர் [14]

வரிசை எண்	நாடு	காலம்	நூல் அல்லது வழக்காறு	'திரைமிலர்' என்னும் சொல்லின் திரிந்த வரலாறு
1.	இந்தியா	கி.மு. 1000	பழைய தமிழின் சொற்றொகுதி	திரைமிலர் > திரமிலர் > திரமிடர்
		கி.மு. 100 அளவில் கி.பி. 1573	வட இந்தியக் கல்வெட்டுகளிலும், 'இந்தியாவில் புத்த சமயம்' என்ற தார நாதரின் வரலாற்று நூலிலும்	திரமிளர்
		கி.மு. முதல் நூற்றாண்டு முதல் கி.பி. 400 வரை	மனுதரும சாத்திரம் XI. 43–44 | மகாபாரதம்	திராவிடர்
			கால்டுவெல் பக் 8–10	தமிழர் (தமிழைப் பேசுவோர்)
2.	கிரீஸ்	கி. மு. 484–425	ஹெரடோடஸ் I. 173, VII. p.92	தெர்மிலாய்
3,	ஸ்பெயின்	கி. மு. ஆறாம் நூற்றாண்டு	ஏவியனஸ் பெரிபுளூஸ், VIII, 193	திரேகனஸ்
4.	பிரான்சு	கி.மு.330–400	அமியேனஸ் மர்சிலேனஸ் XV, 94	திரவிடேய்
5.	பிரிட்டிஷ் தீவுகள்	கி.மு. நான்காம் நூற்றாண்டு	அரேலியஸ் விக்டர் டி காசேனி பஸ், IV, 2	திரிஸ்டயே
		கி.மு. 100–44	சீஸர், டிபெல்லோ காலிகோ	துரூய்ட்டே
			அயர்லாந்திலுள்ள துரூய்ட் (Druid) மக்களின் பெயர்	துருவாட்
			வேல்சிலுள்ள துரூய்ட் (Druid) மக்களின் பெயர்	தெர்வைட்

14. Heras, Father: The Original Name of Proto. Indians'–என்னும் கட்டுரையின் சுருக்கம்: The Eleventh All India Oriental Languages Conference, Proceedings: 1941; pp. 123.137.

1.23 இவ்வட்டவணையிலிருந்து பண்டைக் காலத்தில் திராவிட இனத்தோடு தொடர்புடைய மக்கள், உலகின் பல பகுதிகளில் பரவி இருந்தமை புலனாகின்றது. 'திரைமிலர்' என்னும் சொல்லே 'திராவிடர்' எனத் திரிந்தது என்னும் கருத்தினை நாம் உடன்பட இயலவில்லை. எனினும், 'திராவிடரின்' தோற்றம் பற்றிய ஆராய்ச்சிக்கு இப் பெயர்த்திரிபு பற்றிய விளக்கம் மறைமுகச் சான்றுகள் சிலவற்றைத் தந்து உதவுவதை நாம் புறக்கணிக்க இயலாது.

1.24 டாக்டர் கால்டுவெல், 'திராவிடம் ' என்னும்சொல், சமஸ்கிருத மொழிச்சொல்லே என்னும் கருத்தை நிலைநாட்டுவதற்குப் பழைய வடமொழி நூல்களிலிருந்து சான்றுகள் பல காட்டியுள்ளார். "திராவிடம் என்ற சொல், திரமிடம் என்று பல இடங்களில் வழங்கப்பட்டுள்ளது. திராவிடம் என்பது திரவிடம் எனக் குறுகி, திரவிடம், திரமிடம் என்றாயிற்று எனத் துணிதல் ஒருவாறு பொருந்தும். இவ்விருசொற்களும் தமிழில் வழங்குகின்றன. எனினும், திரமிடம் என்ற சொல்லே தமிழ் நிகண்டுகளில் முதலிடம் பெறுகின்றது. இனி வராகமிகிரரின் பிரகத் சம்மிதையில் திராவிடம் என்ற சொல் திரவிடம் என்பதற்கு மாறாகப் பல இடங்களில் வழங்கப்பட்டுள்ளது என டாக்டர் கெர்ன் என்ற அறிஞர் கூறுகிறார். இந்தத் திரமிடம் என்பதே திரமிளம் என்பதாக 'இந்தியாவில் புத்தமத வளர்ச்சி' என்று கி.பி. 1573இல் தாரநாதர் என்பவரால் திபெத்தில் எழுதப்பெற்ற ஒரு நூலிற் காணப்படுகிறது. மலையாள மொழியிலுள்ள புராணங்களில் இவ்வுருவமே காணப்படுகிறதென டாக்டர் குண்டெர்ட் என்பவர் குறித்துள்ளார். மகா வமிசத்திலுள்ள 'பாலி'யில் திரமிளம் என்பது தாமிலோ என வழங்கப்பட்டுள்ளது. சிரமணம் என்ற வடசொல் சமணம் என்று திரிந்துள்ளது ஈண்டு நோக்கத்தக்கது. இத் தாமிலோ' என்பதே தமிழ் என்றாயிற்று என்று எளிதில் உய்த்துணரலாம்'[15] என்று அவர் துணிந்துள்ளார்.

---

15. Caldwell, R.: Op.cit P. 8.

1.25 ஆனால், இக்கருத்திற்கு நேர்மாறான சான்றுகள் பழைய தமிழ் இலக்கியத்துள்ளும், பாலி, சமஸ்கிருத மொழி நூல்களிலும், பண்டைக் கல்வெட்டுகளிலும் காணப்பெறுகின்றன. பழைய தமிழ் இலக்கியத்துள் 'திராவிடம்' என்ற சொல்லாட்சியைக் காண்பதரிது. தேவாரகாலத்தில் கூட "ஆரியன் கண்டாய்"[16] என்றுதான் தமிழ்ச் சான்றோர் குறிப்பிட்டுள்ளனர்.

1.26 வடமொழி நூல்களில் 'திராவிடம் 'என்ற சொல் பிற்பட்ட காலத்திய வழக்காகத் தோன்றுகிறது. யசுர் வேதத்தில் 'த்ரமிளம்' என்ற சொல்லே கையாளப்பெற்றுள்ளது. வடமொழியில் ழகரம் கிடையாது. சில உயிர்மெய் முதல்களோடு ரகரத்தைச் சேர்த்து, புணரெழுத்துகளாகத் திரிப்பது வடநூலார் வழக்கம். இதற்குப் 'பவளம்' என்னும் தமிழ்ச்சொல்லை 'ப்ரவாளம் 'என்று வடமொழியில் திரிந்து வழங்குவதைச் சிறந்த சான்றாகக் காட்டலாம். இவ்வடிப்படையில் 'தமிழ்' என்னும் சொல் தமிழ >த்ரமிள> த்ரமிட>திரவிட> எனத் திரிந்து வடமொழியில் வழக்காறு பெற்றிருக்க வேண்டும் என்பது டாக்டர் கிரியர்சன் என்னும் மொழி நூல் அறிஞருடைய கருத்தாகும்.[17]

சமஸ்கிருதத்தில் திராவிடம்

1.27 இதை அரண் செய்யும் வகையில் வடமொழி நூல்களுள் 'திராவிடம்' என்னும் சொல், பிராகிருத மொழிகளின் வழியாகக் கடன் வாங்கப் பெற்ற சொல்லாக அமைந்திருக்கிறது. பிராகிருத மொழிக் கல்வெட்டுகளுள் பழமையானவற்றுள் 'திரமிளம்' என்ற சொல் வழக்குத்தான் காணப்படுகிறது. வேதகாலத்திற்கு முன்பிருந்து, வடஇந்தியாவில் வாழ்ந்துவந்த மக்களுக்கு விராடியர் (Vratyar) என்பதே பழைய பெயராகும். மிகப் பிற்பட்ட

16. அப்பர் தேவாரம், 6:23:5,, இளமுருகனார் பதிப்பு, சென்னை, 1953.
17. Grierson, G. A. Linguistic Survey of India Vol. IV: Munda and Dravidian Languages, Govt. Press: Calcutta, 1906., P. 298.

காலத்திலேயே அவர்களைத் 'திராவிடர்' என்னும் பெயரால் சுட்டும் வழக்குண்டாயிற்று. வேதகால ஆரியர், அவர்களை 'விராடியர்' என்னும் பெயராலேயே அழைத்தனர். கிறித்துவ நூற்றாண்டின் தொடக்கத்தில் வழக்கிற்கு வந்த 'திராவிடம் ' என்ற சொல் உண்மையில் 'தமிழ்' என்னும் சொல்லுக்கு நேராக வடமொழியில் வழங்கும் பிராகிருத மொழி (பாகத) யின் சிதைவாகும் என்று, 'இந்தியாவின் சமயங்கள்' என்னும் நூலின் ஆசிரியர் கருதுவது இங்குக் கருதத்தக்கது.[18]

1.28 பிராகிருத மொழிக் கல்வெட்டுகளிலும் வடமொழி இலக்கியங்களிலும் 'த்ரமிளம்' என்னும் வடிவமே பண்டைய வழக்காகத் தோன்றுகிறது. கலிங்க நாட்டின் சிறப்புமிக்க மன்னனான காரவேலன், கி.மு. 169இல் பொறித்த பிராகிருதமொழிக் கல்வெட்டு ஒன்றில், 'தமது பதினோராவது ஆட்சி ஆண்டில், நூற்றுப் பதின்மூன்று ஆண்டுகளாகத் தமிழக மன்னர்கள் அயலார் படையெடுப்பை எதிர்ப்பதற்கு அமைத்துப் போற்றிய கூட்டணியை, 'த்ரமிள தேச சங்காதம்' என்று குறிப்பிட்டுள்ளான். [19]

1.29 கி.பி. ஏழாம், எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வட மொழி நூல்களிலும், கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் திரமிளர், தமிளர் என்னும் சொல்லாட்சியே பெருவழக்குடையதாக இருந்ததை நாம் காணுகின்றோம். தண்டி(ன்) என்னும் வடமொழி வாணர் இயற்றிய 'அவந்தி சுந்தரி கதை' என்னும் இலக்கியத்தில், தொண்டை நாடு 'திரமிள ' தேசமாகக் குறிப்பிடப்பெற்றிருக்கிறது.[20] இக்குவாகு அரச மரபினருடைய கல்வெட்டுகளில் தமிழரைப் பற்றிய குறிப்பு வருகின்ற இடங்களில் எல்லாம் 'தமிளர்' என்ற சொல்

---

18. Karmarkar, A.P.: The Religions of India, Vol. I, The Vritiya or Dravidian System, Mira Publishing House, Lonavla, 1950: P.vii.
19. Jayaswal, K. P. Imperial History of India, Munshiram Manohar Lal, Delhi, 1969., P. 16.
20. Madras University Journal, Vol. V. pt. 2; pp. 4–6.

வழங்கப்பட்டிருக்கிறது.[21] தமிழ்நாட்டில் சிறப்புற்று விளங்கிய பல்லவ அரசர்களுள் ஒருவனான நந்திவர்மப் பல்லவ மல்லன் (கி.பி. 710_775) வழங்கிய உதயேந்திரம் செப்பேட்டில் உள்ள வடமொழி வாசகத்தில் 'திரமிளர் ' என்னும் சொல் தமிழரைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பெற்றுள்ளதை நாம் இங்குக் கருத வேண்டும்.[22]

1.30 இவற்றிலிருந்து த்ரமிளம், திரமிளர் என்பதே பழைய வழக்கு என்பதும், திராவிடர் என்பது பிற்பட்ட வழக்கு என்பதும் தெரியவருகிறது. வடமொழியில் 'திராவிடம் ' என்னும் சொல் கி.பி.ஆறாம் நூற்றாண்டை ஒட்டியே பெருவழக்கிற்கு வந்துள்ளதை ஆராய்ச்சியாளர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. கி. பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் கருதப்பெறும் குமாரிலபட்டர் என்பவர் 'ஆந்திர–திராவிட பாஷா' என்ற சொற்றொடரைப் பயன் படுத்தியுள்ளார்.[23]

1.31 இவருடைய காலத்திற்கு முன்பு 'திராவிட' என்னும் சொல் அருகிய வழக்காகவே இருந்திருக்கிறது. குப்தப் பேரரசர் காலத்தில் செப்பம் செய்யப் பெற்று இன்றைய வடிவில் பெரிதும் முறைப்படுத்தப் பெற்ற பாரதம், மனு தரும சாத்திரம் போன்ற வடமொழி நூல்களில் இச்சொல் இடம் பெற்றிருக்கிறது. வியாச பாரதத்தின் சபாபருவத்தில் (இயல், 30) சகாதேவனால் வெல்லப் பெற்ற மன்னர்கள் பாண்டியர், திராவிடர், உதரர் (Udras), கேரளர் ஆந்திரர் என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.[24] இதை நாம் கூர்ந்து நோக்குவோமானால், இப் பகுதி ஓர் இடைச்செருகல் என்பது எளிதில் புலனாகும். சாணக்கியருடைய அருத்த சாத்திரத்தில் பாண்டியருடைய பெயர் குறிப்பிடப் பெற்றிருக்கிறதே ஒழிய, 'திராவிடர்' என்னும் பெயர் வழங்கப்பெறவில்லை என்பதும் இங்கு நினைவு கூர்தற்குரியதாகும்.

---

21. Epigraphia Indica, Vol. XX, pp. 22–23.
22. South Indian Inscriptions, Vol. II; P. 508.
23. Caldwell, R. Op cit. p. 4.
24. Mookerji, R. K.: The Fundamental Unity of India, Bharatiya Vidhya Bhavan, Bombay, 1954.. pp. 75–76.

1.32 மனுதரும சாத்திரத்தின் பத்தாவது இயலில் கீழ்வரும் சத்திரியக்குடிகள் படிப்படியாக ஆரியருடைய ஒழுகலாற்று நெறியிலிருந்து வழுவி, பிராமணரோடு கொண்டிருந்த தொடர்பினைஇழந்து,சாதியிலிருந்துவெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் பௌண்ரட்டகர், ஒட்ரர், திராவிடர், காம்போஜர், யவனர், சாகர், பாரதர், பஹ்லவர், சீனர், கிராதர், தரதர், கசர் என்பவராவர்."[25]

1.33 வராகமிகிரருடைய பிரகத் சம்மிதை இந்திய நாட்டை ஒன்பது பெரும்பகுதிகளாகப் பிரித்து, அவற்றில் உள்ள மக்களினங்களைப்பற்றியும், அரசுகளைப் பற்றியும் சில முக்கியக் குறிப்புகளைத் தருகிறது. அவற்றுள் 'தென்–மேற்குப் பகுதியில் ' உள்ள நாடுகளுள் ஒன்றாகத் 'திரமிடம்' குறிப்பிடப்பெற்றுள்ளது.[26] வராகமிகிரருடைய காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்பர்.[27]

1.34 இவை யாவும் 'திராவிடம் ' என்னும் வழக்குக் காலத்தால் மிகப்பிற்பட்டது என்பதை ஒருமுகமாக உணர்த்துகின்றன. எனவே, திராவிடம் என்னும் வடமொழிச் சொல் திரிந்தே 'தமிழ்' என்னும் சொல் தோன்றியது என்னும் கால்டுவெல்லின் கருத்து இன்றைக்குக் கிடைத்திருக்கின்ற சான்றுகளினால் பொருத்தமற்றதாகப்போய்விடுகிறது. மேலும், பிற திராவிட மொழிகளிலும் 'தமிழ்' என்னும் சொல்லே திரிந்து வழங்குவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. மலையாளத்தில் 'தமிழ் ' என்றும், தோடர் மொழியில் 'தொபிள்' என்றும் கன்னடத்தில் 'தமிள' 'தம்பள' என்றும், துளுவமொழியில் 'தமுளு,' 'தமிளு ' 'தம்புளு' என்றும் வழங்கி

---

25. Manava Dharma Sastra, Sacred Books of the East; Vol. 25; Ed, Max–muller, Oxford 1885. 10: 42.43;

26 Mookerji, R. K.: The Fundamental Unity of India, p. 78.

27 Macdonell, A. A.: A History of Sanskrit Literature, Munshiram Manoharlal. Delhi, 1958, p. 318.

வருகிறது. (Vide: A Dravidian Etymological Dictionary, p. 199).

1.35 மற்றும், அவர் "திராவிட மொழிகள்' என்று குறிக்கப்பட்டது தமிழையோ, தெலுங்கையோ அன்றி அவைபோன்ற தனிமொழியையோ அன்று என்பதும், தமிழையும், தெலுங்கையும் மற்றுந் தென்னிந்திய மொழிகளனைத்தையும் உட்கொண்ட ஒரு மொழியினத்தையே என்பதும், அவை யாவற்றையும் ஓரின மொழியாகவே வடவர் கருதினர் என்பதும் எளிதில் விளங்கும்"[28] என்று கூறுவதும் உண்மையாகாது.

1.36 மேற்கண்ட வடமொழி இலக்கியச் சான்றுகளில் எல்லாம், தமிழையும், தமிழரையும், தமிழகத்தையும் தெளிவாகக் குறிக்கும் இடங்களிலேயே 'திராவிடம் ' என்னும் சொல் வழங்கப் பெற்றுள்ளதை நாம் கருத்திலிருத்த வேண்டும். கி.பி. எட்டாம் நூற்றாண்டினரான ஆதிசங்கரர், தம்முடைய 'சௌந்தர்யலகரி ' என்னும் நூலில் திருஞானசம்பந்தரை, 'திராவிட சிசு' (செய்.75) என்று குறிப்பிட்டுள்ளமையும் இக் கருத்தை அரண்செய்கிறது.

1.37 வடமொழி நூலார் தமிழை ஒரு பிராகிருதமாகக் கருதி அதைத் 'திராவிடி 'என்னும் பெயராலேயே அழைத்துள்ளனர்.[29] 'லலிதவிஸ்தாரம்' என்னும் பௌத்த சமயநூல், அறுபத்துநான்கு வகையான எழுத்து முறைகளைக் குறிப்பிடுகின்றபொழுது 'திராமிளி ' என்றும், 'தாமிழி ' என்றும் தமிழ் எழுத்து முறையைச் சுட்டுகிறது.[30] கிறித்துவ நூற்றாண்டிற்கு முன்னர்த் தமிழ்மொழியிலன்றிப் பிற தென்னிந்திய மொழிகளில் இலக்கியம் இல்லாததால், வடமொழியாளர் தமிழையே திராவிடம் என்னும் சொல்லால் குறித்திருக்க வேண்டும்.

தமிழ்நாட்டு வழக்கு

28 Caldwell, R.: Op.cit. p. 6.

29 Ibid, p. 5.

30 கல்வெட்டுக் கருத்தரங்கு, தமிழகத் தொல்பொருளியல் துறைவெளியீடு, சென்னை, 1968., பக், 52.

1.38 மேலும், கி. பி. 470ஆம் ஆண்டில், வச்சிரநந்தி என்னும் சமணர், மதுரை மாநகரில் நிறுவிய தமிழ்ச் சங்கத்தைத் 'திரமிள சங்கம்' என்று பிராகிருத மொழி நூல்களும் வடமொழி நூல்களும் குறிப்பிடுகின்றன.[31] திருவாய்மொழியைத் 'திராவிட வேதம்' என்று கூறும் மரபும், நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைத் 'திராவிட வேதம்' என்று சுட்டும் மரபும் இருந்துவருகிறது. தமிழ் இலக்கணத்தைத் 'திராவிட சாஸ்திரம்' என்று திவ்வியப்பிரபந்த உரையாசிரியர் பிள்ளை லோகாச்சாரியர் குறிப்பிடுவதும்[32] இங்கு நினைவு கூர்தற்குரியது.

1.39 பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தாயுமானவர் தமிழைத் 'திராவிடம் ' என்றே குறிப்பிட்டுள்ளார்.

"..................................வடமொழியிலே
வல்லான் ஒருத்தன்வர வும்த்ரா விடத்திலே
வந்ததா விவகரிப்பேன்."
(தாயுமானவர் பாடல், 66)

1.40 இத்தகையஉள்நாட்டு அறிஞர்களுடையகருத்துகளே அல்லாமல், வெளிநாட்டு வரலாற்றாசிரியர்கள், பயணிகள், ஆராய்ச்சியாளர், கவிஞர் முதலியோர் பண்டைக்காலம் முதற் கொண்டு பதிவுசெய்துள்ள குறிப்புகளும் தமிழகத்தையே 'திராவிடம்' என்ற சொல்லால் குறிப்பிட்டனர் என்பதற்கு மறை முகமாகச் சான்று பகருகின்றன.

வெளிநாட்டாரின் குறிப்பு

1.41 தமிழகம் என்னும் பெயரினை 'டெமரிகெ' (Dami- rike) என்று கிரேக்கர்களும், 'டெமரிசி' (Damirce) என்று ரோமானியரும், ரேவண்ணா உலக நிலநூல் ஆசிரியர் 'டெமிரிக்கா' (Damirica) என்றும் திரித்து

---

31 Srinivasa Ayyangar, P. T.: History of the Tamils, C. Coomara- swamy Naidu, Madras, 19 9., p. 247. F. N:

32 பெரிய திருமொழிச் சிறப்புப்பாயிரம் உரை, பகவத் விஷயம், பாகம், 21 கிரந்தமாலா வெளியீடு, காஞ்சி, 1954.

வழங்கியுள்ளனர்.[33] கி. பி. முதல் நூற்றாண்டில் எழுதப்பெற்ற "செங்கடற் பயணக்கையேடு" (Periplus of the Erythrean Sea) தமிழரைத் தமிராய் (Tamirai) என்று குறிப்பிட்டுள்ளார்.[34] தாலமி என்னும் கிரேக்க ஆசிரியர் (கி.பி. 139_161) தமிழகத்தை, 'தமிரிகே'[35] என்றே குறிப்பிட்டுள்ளார். இவை அனைத்தும் மேனாட்டு ஆசிரியர்கள் பண்டைக் காலத்தில் தமிழகத்தைத் 'தமிழகம்' என்னும் பெயராலேயே அறிந்திருந்ததைத் தெரிவிக்கின்றன.

1.42 கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த சீன யாத்திரிகர் யுவான் சுவாங்கு, தமிழகத்தைத் தம்முடைய குறிப்பில் தெகி–மொ–லொ (Tehi–mo–lo) என்று குறிப்பிட்டுள்ளார்.[36] இதைத் 'திமில' (Dimala) அல்லது 'திமர' (Dimara) என்ற சொல்லின் திரிபாகக் கொள்ளலாம் என்பது டாக்டர் கால்டுவெல்லின் கருத்தாகும்.[37] இடைக்காலத்திய ஐரோப்பியர் 'தமுளிக்க மொழி' (Lingua Tamulica) என்றே தமிழைக் குறிப்பிட்டுள்ளனர். மற்றும் சிலர் 'மாபார்' அல்லது மலபார் என்னும் பெயரால் அதைச் சுட்டியும் வந்தனர்.[38]

1.43 இதை ஆராய்ந்த ஜுலே பிளாக்கு, 'தமுளியன் ' என்பதுதான் முதன்முதல் அக்குடும்ப மொழிகளுக்குக் கொடுக்கப் பட்ட பெயராகும். அப்பெயரின் பண்டை வடிவம் சமஸ்கிருத மொழியாளருக்குத் 'திராமிட்' 'திராவிட' என்று நன்கு அறிமுகமாகி இருந்தமையால், அதைக் கால்டுவெல் குழுப் பெயராக வழங்க வசதியாக இருக்கும் என்று கருதி

---

33 Smith, V. A.: The Early History of India, 3rd Ed. O. U. P., London 1912. P.439.

34 Schoff, (Ed.): Periplus, New york, 1912, P. 57.

35 Warmington, Commerce between the Roman Empire and India, Cam–bridge, 1928. PP. 114–115.

36 Surendranath Sen: INDIA Through Chinese Eyes, Univ. of Madras, 1956. p. 46

37 Caldwell, R. Op.cit. P. 10.

38 Bloch, Jules: The Grammatical sturcture of the Diavidian Languages, Dec–can College, Poona, 1954. P.8.

எடுத்துக்கொண்டார்[39] என்று குறிப்பிட்டுள்ளமை இங்கு நினைவுகூர்தற்குரியதாகும்.

1.44 ""திராவிட' என்னும் சொல் 'தமிழ்' என்னும் சொல்லின் திரிபாகவே இருக்கவேண்டும். அதனால் 'திராவிடப்பண்பு' (Dravidian) என்னும் சொல் தமிழ்மொழியின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றை நேரிய முறையில் சுட்டுவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். ஆனால், இக்காலத்து அறிஞர்களால் அச்சொல்லின் பொருள் விரிவுபடுத்தப்பெற்று, தென்னிந்திய மக்கள் அனைவரையும் சுட்டும் இனப்பொதுப் பெயராகக் கொள்ளப்பட்டிருக்கிறது"[40] என்னும் பேராசிரியர் வீ. ஆர். இராமச்சந்திர தீட்சிதரின் முடிவு பொருத்தமானதாகவும், போற்றத்தக்கதாகவும் இருக்கிறது.

திராவிடர் இனப் பாகுபாடு

1.45 மக்களுடைய உடற்கூறுபற்றி ஆராய்ந்து உரைக்கும் உடற்கூற்று மானிட இயல் (Physical Anthropology) நூலார். மொழிகளைப் பற்றியும் பண்பாடுகளைப் பற்றியும் சமூகவியல் நூலார் கூறுகின்ற கருத்துகளைப் பற்றிக் கவலையுறுவது இல்லை. அவர்கள் இந்தியாவில் வாழும் மக்களிடையே காணப்பெறும் உடற்கூற்று இயல்புகளை வகைப்படுத்தி ஆராய்ந்துள்ளனர்.

1.46 இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற

---

39 Ibid, P. XXVI.

40 Ramachandra Dikshitar. V. R.: Pre. Historic South India, Univ. of Madras. 951., p. 03.
அண்மையில் பேராசிரியர், K. A. நீலகண்டசாஸ்திரியாரும் இக்கருத்தினைக் கொண்டுள்ளார். அவர் "ஆதிகாலத்தில் 'திராவிட' என்னும். சொல் 'தமிழ்' என்னும் சொல்லின் ஒரு பொருள் குறிக்கும் பிற சொல்லாக (Synonym) வழங்கப் பெற்றது" என்பதைத் தக்க சான்றுகள் நாட்டி நிறுவியுள்ளார்.
காண்க: Cultural Contact Between Aryans and Dravidians by K. A. N. Sastri, Manaktlas. Bombay, 1967, pp. 10–12.

இந்தியாவின் மக்கள் கணக்கெடுப்பினால் பல உண்மைகள் வெளிப்பட்டன. சர் ஹெர்பர்ட் ரிசிலி (Risley) இந்தியாவில் மூன்று முதன்மையான இனத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்துவருவதாக அறிவித்துள்ளார். அவரே இந்திய மக்களை எழுவகைப்பட்ட குழுக்களாகப் பாகுபடுத்தியும் உள்ளார். அக்குழுக்களை அவர், மங்கோலியக் குழு, இந்திய–ஆரியக்குழு, திராவிடக்குழு, மங்கோலிய திராவிடக்குழு, ஆரிய திராவிடக்குழு, சித்திய–திராவிடக்குழு, துருக்கிய– இரானியக் குழு என்னும் பெயரிட்டு அழைத்துள்ளார்.[41] இப் பாகுபாடு, சிறந்த அறிவியல் ஆராய்ச்சி முறையின் அடிப்படையில் செய்யப்படவில்லை என்று அறிஞர் கருதுகின்றனர்.

1.47 1933 ஆம் ஆண்டில் ஜே. எச். ஹட்டன் என்பவர் மிக விரிவான திட்டத்தின் அடிப்படையில் மானிட இயலிலும், இன மரபியலிலும் உண்டாகியிருக்கின்ற வளர்ச்சிகளையும் புதுமைப் போக்குகளையும் கருத்தில் கொண்டு, இந்திய மக்கள் கணிப்பைத் தொடங்கினார். அவர் இனத்திற்கும் மொழிக்கும் பண்பாட்டிற்கும் இடையே உள்ள தொடர்புகளையும், கிளையுறவுகளையும் நுட்பமாக ஆராய்ந்து, 'இந்தியாவில் வாழும் மக்கள் எல்லாருமே வெளிநாடுகளிலிருந்து வந்தவர்' என்னும் கருத்தினைத் தெரிவித்தார். அவர் இந்திய மக்களை எண்வகையாகப் பாகுபடுத்தியுள்ளார்:

(1) நீக்கிரிட்டோக்கள் (Negritos)

(2) ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் மூதாதையர் (Proto– Australoids)

(3) தொடக்க கால நடுநிலக் கடல் இனத்தவர் (Early Mediterraneans)

(4) நாகரிக முதிர்ச்சியுற்ற நடுநிலக் கடல் இனத்தவர், (திராவிடர்) (Civilised or Advanced Mediterraneans)

---

41 Risley, H. H. Op. cit, pp. 28–41.

(5) ஆர்மினாய்டுகள் (Armenoids)

(6) அல்பைனர் (Alpiner)

(7) நார்டிக்குகள் எனப்படும் வேதகால ஆரியர் (Nordics)

(8) மங்கோலியப் பழங்குடியினர் (Mongoloids) என்பவராவர்.[42]

1.48 இந்திய மானிட இயல் மதிப்பீட்டுத் துறையின் இயக்குநராகச் சிறப்புற்று விளங்கிய டாக்டர் பி. எஸ். குகா, மீண்டும் இந்திய மக்களுடைய இனப் பண்பாட்டைப் பற்றி ஆராய்ந்து, சில சிறந்த முடிவுகளை உலகிற்கு அளித்துள்ளார். இந்திய மக்களை ஆறு முதன்மை இனங்களாகவும், அவற்றோடு தொடர்புடைய ஒன்பது துணை வகைகளாகவும் அவர் பாகுபாடு செய்துள்ளார்

(1) நீக்கிரிட்டோக்கள்

(2) ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் மூதாதையர்

(3) மங்கோலியப் பழங்குடியினர். அவர்களுள்,

(அ) பண்டை மங்கோலியர்,

(ஆ) திபெத்திய மங்கோலியர்,

என்று இரு வகையுண்டு.

(4) நடுநிலக் கடல் இனத்தவர்: அவர்களுள்,

(அ) பண்டை நடுநிலக் கடல் இனத்தவர்

(ஆ) நடுநிலக் கடல் இனத்தவர்,

(இ) கீழை நாடுகளில் உள்ள நடுநிலக்கடல் இனத்தவர் (நாகரிக முதிர்ச்சியுற்றவர்)

(5) மேலைநாட்டுக் குறுகிய தலையுடைய

42 Hutton, J. H.: Census of India, 1931; Vol. I Pt. I. Ethnographic survey of India, Govt. Press, Calcutta, 1935, PP. 424 ff.

இனத்தவர்களுள், மூன்று பிரிவுகளுண்டு:

(அ) அல்பைனர்

(ஆ) தினாரிக்குகள்

(இ) ஆர்மினாய்டுகள்

(6) நார்டிக்குகள் (ஆரியர்)

என்னும் விரிவான பாகுபாட்டை டாக்டர் குகா செய்துள்ளார்,[43] அவற்றுள் நடுநிலக் கடற்பகுதிக்குரிய பண்டை மக்களுள் திராவிட இனத்தை அவர் சேர்த்துள்ளார்.[44]

திராவிடர் இனத்தின் தோற்றம்

1.49 இந்தியாவின் தொல்பழங்குடிகளுள் திராவிடர் முதன்மை இடத்தைப் பெறுகின்றனர். அவர்கள் புதிய கற்கருவி நாகரிகக் காலம் முதற்கொண்டு இந்தியாவில் வாழ்ந்துவருவதாகத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.[45] இந்திய மக்களின் பண்டைத் தொகுதியில் முதன்மையாய் இருந்த திராவிட இனத்தவர் பிற்காலத்தில் வந்து குடியேறிய ஆரியர், சித்தியர், மங்கோலியர் முதலிய பிற இனத்தவருடன் கலப்புற நேர்ந்ததை"[46] வரலாறு எடுத்துரைக்கிறது.

1.50 திராவிட இனத்தவர் "பெரும்பாலும் குள்ளமான வடிவினர்; கரிய நிறத்தினர்; தழைத்த கூந்தலும் அதில் ஒரேவொருகால் சுருண்ட மயிரும் வாய்க்கப்பெற்றவர்; கரிய விழியினர்; நீண்ட தலை ஓட்டை உடையவர்; ஒரேவொருகால் அடியிற் குழிந்த அகன்ற மூக்கினர்"[47] என்று இந்திய மக்கள்

---

43 Guha, B.S.: Racial Affinities of the Peoples of India; in the Census of India, 1931. Report, Vol. 1; pt. 3; Calcutta, 1937.PP. ix.lxxi.

44 Guha, B.S.: Racial Elements in the Populalion, Oxford Pamph. lets, No. 22; Bombay, 1944, P. 17.

45 Foote, R. B.: Indian Pre–Historic and Proto–Historic Antiquities, Madras, 1916, PP. 14–15.

46 Rapson, E. J.: Cambridge History of India, Vol. I: Ancient India 1912; Vol. I: Ancient India, Cambridge, PP. 41–43.

47 Risley, H. H. The People of India, P. 48. Guha, B. S. Racial Af–

கணிப்பு ஆய்வாளர் கருதுகின்றனர்.

1.51 இத்தகைய உடற்கூற்றியல்புகளைக் கொண்ட திராவிடரை மானிட இயல் நூலார், 'கலவை இனத்துள்' (Composite Race) இந்திய-திராவிடர் இனத்தினுள் அடக்கிக் கூறுவர்.[48] திராவிடர் நாகரிக முதிர்ச்சியுற்ற நடுநிலக் கடல் இனத்தின் ஒரு பிரிவினர் என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

1.52 திராவிடர் இனத்தின் தோற்றத்தைப்பற்றிப் பல வகைப்பட்ட கருத்துகளை அறிஞர் பெருமக்கள் தெரிவித்துள்ளனர். தமிழருடைய வரலாற்றை முதன்முதல் முறையாக ஆங்கிலத்தில் எழுதிய தமிழறிஞர் திரு. வி.கனகசபை பிள்ளை அவர்கள், தமிழர் (திராவிடர்) திபெத்திலிருந்து தென்னிந்தியாவிற்கு வந்தேறிய மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார்.[49] தென்னாட்டின் பழங்குடி மக்களான வில்லவர், மீனவர் முதலியவர்களை நடு ஆசியாவிலிருந்து வந்த நாகர்கள் என்னும் கூட்டத்தார் வென்று, அவர்களைக் காடுகளுக்கும் மலைகளுக்கும் விரட்டினர்; அதன்பிறகு திபெத்திலிருந்து வந்த மங்கோலிய இனத்தைச் சேர்ந்த தமிழர், நாகர்களை வென்று அடக்கினர் என்பது அவருடைய நம்பிக்கையாகும். தமிழர் நான்கு பிரிவாகத் தென்னாட்டில் நுழைந்தனராம். 'மாறர்' என்ற கூட்டத்தினர் முதன்முதல் தமிழகத்திற்கு வந்து பாண்டிய நாட்டில் தங்கினர் என்றும், அதன்பிறகு வந்த 'திரையர்' என்பார் சோழநாட்டில் வாழ வசதிசெய்துகொண்டனர் என்றும், மூன்றாவதாக வந்த 'வானவர்' என்ற குழுவினர்

---

finities of the Peoples of India, PP. 612.613.

48 Hooton, Ernest Albert: Up From the Ape, Motilal Banarsidass, Delhi, 1965., PP. 612-616.

49 Kanakasabhai, V. The Tamils 1800 years Ago, Kazhagam, Madras, 1954, P. 74;

சேர நாட்டைத் தமதாக்கிக்கொண்டனர் என்றும் இம்மூவருக்கும் பின்னர் வந்த 'கோசர்' என்னும் கூட்டத்தார் கொங்கு நாட்டைத் தங்களாட்சிக்குட்படுத்திக் கொண்டனர் என்றும் திரு.வி.கனகசபை பிள்ளை விளக்கியுள்ளார்.[50]

1.53 தமிழர் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர் என்னும் இக் கருத்து மக்களின் மரபு நூலிற்கு முரண்படுகிறது. திராவிடருடைய உடற்கூறு மங்கோலியருடைய உடற்கூற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டுள்ளமை இங்குச் சிந்தித்தற்குரியது. இவையல்லாமல், சமூகப் பழக்க வழக்கங்கள், பண்பாட்டு மரபுகள் போன்ற யாவும் இவ்விரு மக்களினத்தவரிடையே தொடர்பற்றுக் காணப்பெறுகிறது.

1.54 திராவிடர் இனத்தின் தோற்றத்தைப்பற்றி வழங்கும் கருத்துக்கள் அனைத்தையும் நாம் இரண்டுவகையாகப் பாகுபடுத்தி உரைக்கலாம். முதற்கருத்து திராவிடர்கள் இந்தியாவின் பழங்குடி மக்களேயாவர் என்பதாகும். இரண்டாவது கருத்து திராவிடர்கள் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் என்பதாகும். இவற்றுள் இரண்டாவதாகக் கூறப்பெறும் கருத்தினை நாம் முதலில் ஆராயலாம்.

(அ) வெளிநாட்டிலிருந்து வந்தவர்

1.55 திராவிடர்கள் வெளிநாட்டிலிருந்து வந்தவர் என்னும் கருத்தினைத் தெரிவிக்கும் அறிஞர்கள் பலராவர். பல்வேறு நாடுகளிலிருந்து திராவிடர்கள் இந்தியாவிற்கு வந்ததாக அவர்கள் கூறுகின்றனர். அவர்களுடைய கருத்துகளை நாம் நான்கு வகையாகப் பாகுபடுத்தி ஆராயலாம்.

(1) எகிப்திலிருந்து வந்தவர்

1.56 எலியட் ஸ்மித் (G. Elliot Smith) என்பார் திராவிடர் எகிப்திலிருந்து வந்தனர் என்று கருதுகிறார். கி.மு.

---

50 Ibid, PP. 74–75.

மூன்றாவது ஆயிரம் முதற்கொண்டு பொதுவாகவும் கி. மு. 1800–ஐ அடுத்துப் பேரளவிலும் எகிப்தைவிட்டுப் புறப்பட்ட மக்கள், கடல்வழியாக இந்தியாவிற்கு வந்திருக்கவேண்டும். புதிய பண்பாட்டுக்குரிய மக்கள் திராவிடருக்கு முற்பட்ட பழங்குடிகளுடன் குருதிக்கலப்புற்று அதன் பயனாகத் திராவிடர்களாயினர்[51] என்பது அவருடைய கொள்கை.

1.57 இக் கருத்தை ஏற்றுக்கொண்ட டாக்டர் ஜே.டி. கார்னீலின்ஸ், திராவிடருக்கும் பண்டைய அரேபிய, தூனீசிய மக்களுக்கும் பழக்கவழக்கங்களிலும், தொழில் முறைகளிலும், மொழி வழக்குகளிலும், இடப்பெயர்களிலும் நெருங்கிய தொடர்பு இருந்து வருவதைச் சுட்டிக்காட்டியுள்ளார். இத்தகைய தொடர்பினால், திராவிடர் ஒரு காலத்தில் தூனீசியா, எகிப்து பகுதிகளில் வாழ்ந்திருக்க வேண்டும் என்றும், பின்னரே அவர்கள் இந்தியாவை நோக்கிப் புடை பெயர்ந்திருக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.[52]

(2) நடு ஆசியாவிலிருந்து வந்தவர்

1.58. திராவிடர்கள் நடு ஆசியாவில் வாழ்ந்துவந்த சித்திய இனத்தைச் சேர்ந்தவர் என்றும், அங்கிருந்தே அவர்கள் பலூசிஸ்தானம்வழியாக இந்தியாவிற்குள் நுழைந்தனர் என்றும், அவர்கள் பலூசிஸ்தானத்தில் தங்கியிருந்ததற்குரிய தடயமாக இன்று 'பிராகுவி' மொழிபேசும் மக்கள் வாழ்ந்துவருகின்றனர் என்றும் டாக்டர் கால்டுவெல் எடுத்துரைத்துள்ளார்.[53] திராவிடமொழிகளுக்கும் பிராகுவி மொழிக்கும் இடையே உள்ள ஒற்றுமைப் பண்புகளைச் சுட்டிக்காட்டி, திராவிடர்கள் இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறத்தின் வழியாக இந்தியாவிற்கு வந்திருக்கவேண்டும் என்று அவர் அறிவிக்கிறார்.

---

51 Elliot Smith, G–: Migrations of Early Cultures, London, 1916. pp. 79.80.

52 Cornelins, J. T.: The Graffiti on the Megalithic Pottory of South India and Dravidian Origin, Tamil Culture, XII, No. 4; pp. 287–300.

53 Caldwell, R.: Op. cit. p. 40.

(3) மேற்காசியாவிலிருந்து வந்தவர்

1.59 திராவிடர்கள் மேற்காசியாவிலிருந்து வந்தவர்கள் என்னும் கருத்தை டாக்டர் எஸ். கே. சாட்டர்ஜி, பேராசிரியர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி போன்றோர், தங்கள் ஆராய்ச்சிகளின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். மொழியியல் பேரறிஞரான டாக்டர் எஸ். கே. சாட்டர்ஜி, 'தமிழ் ' என்னும் சொல் பெரும்பாலும் 'திரமிலம்' அல்லது 'திரமிழம் ' என்னும் சொல்லின் திரிபாக இருக்கலாம் என்று கருதுகிறார். சிறிய ஆசியாவில் தொல்பழங் காலத்தில் வாழ்ந்த லைசியர் (Lycians), தங்களுடைய கல் வெட்டுகளில் "திரம்மிலி ' (Trmmli) என்று தங்களைக் குறிப் பிட்டுள்ளனர். அவர்கள் கிரீத்தி (Crete) லிருந்து வந்தவர்கள் என்று எரடோடஸ் குறிப்பிடுகிறார். கிரீத்தில் எலனிக்கு இன மக்களுக்கு முன்பு வாழ்ந்த ஆசியச்சார்புடைய மக்களைக் கிரேக்கர் 'தர்மிலாய்' (Termilai) என்று அழைத்தனர். நடுநிலக் கடற் பகுதியின் கீழ்த்திசையிலிருந்து முடிவாக இந்தியாவிற்குள் நுழைந்த திராவிடமொழி பேசிய மக்கள் கூட்டத்தினருள், சிறப்புமிக்க கிளையினர் தங்களுடைய தேசிய இனத்தின் அல்லது பழங்குடி மரபின் பட்டப்பெயரினைத் தங்களுடன் கொண்டுவந்திருக்கலாம். என்று கருதுவது தவறாகாது. அப் பட்டப் பெயரான 'தர்மிலாய்,' தர்மிலாய் திரிம்மிலி >திரமிழா என்று திரிந்து, இன்றைய தென்னாட்டின் சிறப்புமிக்க மொழியான 'தமிழின் ' பெயராக கி.மு. முதலாயிரத்தின் இடைப்பகுதியில் மாற்றமுற்றிருக்கலாம் என்பது சாட்டர்ஜியின் கருத்தாகும்.[54]

1.60 தென்னிந்தியாவில் வாழும் மக்களுடைய உடற்கூற்று அமைப்பு நடுநிலக்கடல் இனத்து மக்களுடைய உடற்கூற்று அமைப்பிலிருந்து மாறுபட்டு இருக்கிறது என்றும், சிறிய தலையும் எடுப்பான குழிந்த மூக்கும், பிடரியிலிருந்து

54 Chatterji, S. K.: 'Race Movements And Pre–Historic Culture. The Vedic Age, Ed. R. C Majumdar, George Allen & Unwin, London, 1952, P. 158.

உயர்ந்த முகட்டையுடைய தலையும் உடையவர்களாகத் தமிழ் முதலிய திராவிட மொழிகளைப் பேசுகின்ற மக்கள் உள்ளனர் என்றும் பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் கருதுகிறார். மேற்கண்ட உடற் கூற்று அமைப்பினை உடையவர் அர்மினாய்ட் மக்களின வகையைச் சேர்ந்தவராவர்.தமிழரிடத்து இவ்வுடற்கூறே முதன்மையானதாகக் காணப்பெறுகிறது. இத்தகைய உடற்கூற்று இனத்தினர் தென்னிந்தியாவில் தோன்றி இருக்கமுடியாது. இவ்வினத்தைச் சேர்ந்தவர் ஆசியாவில் பாமீர் முதல் லெவாண்ட் வரையிலுள்ள பகுதியில் வாழுகின்றனர். வாணிகத் தொடர்பு காரணமாக அவர்கள் பண்டைக் காலத்தில் இந்தியாவிற்கு வந்திருக்கலாம். இனங்களின் முந்தைய மொழிகளின் முந்தைய வரலாற்றையும் இணைத்துப் பார்க்கின்றபொழுது திராவிடமொழியும், பண்பாடும் அர்மினாய்ட் உடற்கூற்று அமைப்புடைய மக்களின் வாழ்நிலமான அனதோலியா, அர்மீனியா, ஈரான் மேட்டுநிலப்பகுதிகளுக்கு நம்மைத் திரும்ப அழைத்துச் செல்லுகின்றன. கி. மு. மூவாயிரம், ஈராயிரம் ஆண்டுகளுக்கு இடையே அங்கிருந்து ஒரு பண்பாட்டுப் பிழம்பு சிந்துவெளிக்கும், பின்னர் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பண்பாடாகத் தென்னிந்தியாவிற்கும் பாய்ந்தோடியது என்று கூறினால், அது தவறாகாது.

1.61 இக்கருத்தை அரண் செய்யும் வகையில் மெசபடோமியா, ஆப்கானிஸ்தான், ஈரான் மேட்டு நிலங்களில் வாழ்ந்த மக்களுடைய மொழிகளுக்கும், பழக்க வழக்கங்களுக்கும், பண்பாட்டு நெறிகளுக்கும் இடையே மிகச் சிறந்த ஒப்புமைப் பண்புகள் பல காணப்பெறுகின்றன. தாய்வழி மரபுரிமை, நாக வழிபாடு, சக்தி வழிபாடு, உணவினைத் தெய்வத்திற்குப் படைத்தல், தேவதாசி முறை, கோயில் அமைப்பு அரசருடைய அரண்மனை அமைப்பினை ஒத்திருத்தல், வண்ணம் பூசப்பெற்ற மண்பாண்டங்கள், பெருங்கற்படை சமாதிகள் (Megalithics) போன்றவை சிறப்புமிக்க ஒப்புமைப் பண்புகளாகும்.[55]

---

55 Nilakanta Sastri, K. A.: A History of South Indis, Oxford U. P., Madras., 1955. PP. 55.60.

(4) நடுநிலக் கடற்பகுதியிலிருந்து வந்தவர்

(i) கென்னடியின் கருத்து

1.62 இந்தியாவிற்கும் பாபிலோனியாவிற்கும் இடையே பண்டைக் காலத்தில் நடைபெற்ற வாணிகத்தைப்பற்றி ஆய்வு நடத்திய கென்னடி (Kennedy) என்பார், திராவிடருக்கும் நடுநிலக் கடல் இனத்து மக்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமையினையும் தொடர்பினையும் சுட்டிக்காட்டி, திராவிடர்கள் நடுநிலக் கடற்பகுதியிலிருந்து இந்தியாவிற்கு வந்திருக்க வேண்டும் என்று கருதுகிறார்.[56]

(ii) சிலேட்டரின் துணிவு

1.63 'இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு' என்னும் ஆங்கில நூலில், டாக்டர் ஜி. சிலேட்டர், "திராவிட மக்களிடையே உள்ள தலைமை இனக்கூறு நடுநிலக் கடல் இனத்தின் ஒரு கிளையேயாகும். ஆராய்ச்சி நுணுக்கத்துறை சாராத என் பொது முடிவின்படி கூறுவதாயின் தலையோட்டு வடிவம், மயிரமைதிப் பண்பு, மயிர் நிறம், கண் நிறம், உறுப்பமைதி உடலமைதிகள் ஆகியவற்றில் அவ்வினத்தவருடன் குறிப்பிடத்தக்க ஒற்றுமை உடையவர்கள் என்றே கூறத்தகும்"[57] என்று துணிந்துள்ளார்.

(iii) எய்மெண்டார்ப்பின் புதிய விளக்கம்

1.64 இக் கருத்துகளுக்கு ஊட்டமும் உரமும் அளிக்கும் வகையில், பியூரர் கிறிஸ்டோபர் எய்மெண்டார்ப்பு என்னும் லண்டன் பல்கலைக்கழகப் பேராசிரியர் புதியதொரு விளக்கம் தந்துள்ளார். 1952ஆம் ஆண்டில் உலக நாடுகளின் மானிடவியல் மக்களின மரபியல் ஆராய்ச்சிக் கழகத்தின்

---

56 Early Commerce of Babylon with India, Journal of Royal Asiatic Society, Calcutta, 1893, pp. 248.97.

57 கில்பர்ட் சிலேட்டர்: இந்திய நாகரிகத்தில் திராவிடப்பண்பு, தமிழாக்கம்: கா, அப்பாத்துரை, கழகம், 1955 ; பக். 8.

நான்காவது மாநாடு வியன்னாவில் நடைபெற்றது. அம் மாநாட்டில் "திராவிடரின் தோற்றம் பற்றிய புதுக்கருத்து" என்னும் பொருள் பற்றி எய்மெண்டார்ப்பு ஓர் ஆய்வுக் கட்டுரையைப் படித்தார். அதில், தம்முடைய கருத்துகளை அவர் தெளிவுறுத்தியுள்ளார். அவை வருமாறு:

1.65 " அண்மைக் காலத்தில் மைசூர் மாநிலத்தில் பிரமகிரி என்னும் இடத்தில் விரிவான முறையில் தொல்பொருள் ஆராய்ச்சி நடத்தப்பெற்றது. தக்கணத்தின் பல பகுதிகளில் சிறப்பாகக் காணப்படும் கல்–வட்டக்கல்லறைகளின் அமைப்பைப் போன்றதொன்றைப் பிரமகிரியில் அகழ்ந்தெடுத்தனர். அத் தொல்பொருள் சின்னத்தில் மூன்று வகையான பண்பாட்டையுடைய அடுக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அடியடுக்காக உள்ளதைப் புதிய கற்கருவி நாகரிகக் காலத்தின் சின்னமென நாம் கூறலாம். அங்குக் கிடைத்துள்ள பழம்பொருள் கருவிகள் பல. அவற்றுள் சிறப்பு மிக்கது கற்கோடரியாகும். அது பேரளவில் கிடைத்திருக்கிறது. முட்டை வடிவில் மெருகிடப்பெற்ற கூர்மையான வெட்டுவாயோடு தடித்தமுனையுடையதாகக் கற்கோடரிகள் செய்யப்பெற்றுள்ளன. இந்தியத் தீபகற்பம் முழுவதிலும் கூர்மையான தடித்த முனையுடைய இக் கோடரி பரவலாக வழங்கப்பெற்று வந்ததைத் தொல்பொருள் சின்னங்கள் பலவற்றால் நாம் அறிகிறோம்.

1.66 "இத்துடன், பிரமகிரியில் கையினால் செய்யப்பெற்றதும் திருத்தமுறாததுமான மண்பாண்டங்கள் பல இவற்றுடன் காணப்படுகின்றன. இந்த மண்பாண்டங்களையும், கற்கோடரிகளையும் செய்தவர்கள் இடம் விட்டு, இடம் பெயரும் உழவர்களாக இருந்திருக்கவேண்டும். அவர்கள் பன்றிகளையும் கோழி போன்ற பறவைகளையும் வளர்த்தனர். ஆனால், ஆடு மாடு போன்ற வீட்டு விலங்குகளாகிய கால்நடைகளை அவர்கள் அறியாதவர்களாவர். அவர் களுடைய பண்பாட்டுத் தடயத்தின் மீது இரும்பைப் பயன்படுத்திய

நாகரிகம் ஒன்றின் சின்னங்கள் பதிந்து கிடக்கின்றன. அப்புதிய நாகரிகத்தைப் போற்றி வளர்த்த மக்கள் சக்கரத்தினால் செய்யப் பெற்ற பழுப்புநிற மண்பாண்டங்களையும் கறுப்புநிற மண்பாண்டங்களையும் பயன்படுத்தியதோடு சிறப்பாகக் கப்பற்சாளரத்தோடு கூடிய கற்பலகைகளால் மூடப்பட்ட கல்லறைகளைக் (Stone–Cists) கொண்ட பெருங்கற்படை சமாதிகளை (Megalithic tombs) அமைத்தும் உள்ளனர். பிரமகிரியிலும், பெல்லாரி மாவட்டத்தில் ஓரிடத்திலும் செய்யப்பெற்ற அகழ்வாராய்ச்சியாலும் அந்த வட்டாரங்களில் இதற்கு முன்னர்ச் சிறப்புற்று விளங்கிய புதிய கற்கருவி நாகரிகத்திலிருந்து இரும்பைப் பயன்படுத்திய பெருங்கற்படை நாகரிகம் வளர்ச்சியுறவில்லை என்னும் உண்மை புலனாகின்றது.

1.67 "ஆனால், இந்திய தீபகற்பத்திற்கு வெளியே, வேறெங்கோ அந்நாகரிகம் தோன்றி வளர்ந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. பிரமகிரியின் பெருங்கற்படை நாகரிகம் கி.மு.300 அளவில் செழித்திருக்க வேண்டும். ஏனெனில், அதற்கருகில் அசோகரின் கல்வெட்டுகள் காணப்பெறுகின்றன. நாகரிக வளர்ச்சியடையாத புதிய கற்கருவிக்கால தொல் பழங்குடி மக்களுக்கிடையே தம் கருத்துகளைப் பரப்புவதற்காக அசோகர் அப்பகுதியில் கல்வெட்டுக்களைப் பொறித்திருக்க இயலாது. எனவே, கி.மு. 300 அளவிலேயே பிரமகிரியின் வட்டாரத்தில் பெருங்கற்படை நாகரிகத்தினர் வாழ்ந்திருக்க வேண்டும். ஆனால், தக்கணத்தில் இந்தப் புதிய பெருங்கற்படைப் பண்பாடு கி.மு. 500க்குச் சற்று முன்பே தோன்றியிருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. எனவே, புதியதும் சிறப்புமிக்கதுமான ஒரு பண்பாடு எத்துணை விரைவாகப் பரவுமோ, அத்துணை விரைவாக அது தக்கணத்திலும் தென்னிந்தியாவிலும் வியக்கத்தக்க வகையில் மிக விரைவாகப் பேராற்றலுடன் பரவியிருக்க வேண்டும். இன்று திராவிட மொழிகள்

பேசப்பெறும் பகுதிகளில் இத்தகைய பெருங்கற்படை சமாதிகளின் சின்னங்கள் மிகப் பலவாகக் காணப்படுகின்றன. அக்கற்படைச் சமாதிகள் இறந்தோரை அடக்கம் செய்யும் வட்டவடிவக் கல்லறைகளாகவும், கல்பதுக்கைகளாகவும் (Dolmen), நடுகற்களாகவும் (Men–hirs) அமைக்கப்பெற்றுள்ளன. அவற்றுள் இரும்பைத் தவிர வேறெந்த உலோகத்தையும் காணமுடியவில்லை.

1.68 "மேற்குப் பாகிஸ்தானில் கராச்சிக்கு அருகில் கற்பலகைகளால் மூடப்பெற்ற கல்லறைகளின் தொகுதி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதைத்தவிர வட இந்தியாவில் வேறெந்தப் பகுதியிலும் இந்தப் பெருங்கற்படைப் பண்பாட்டின் சின்னங்களைக் காண முடியவில்லை. இந்த இரும்புக் கருவிக்காலப் பெருங்கற்படைப் பண்பாடு வெளியில் இருந்து கொண்டுவரப்பெற்று, தென்னிந்தியாவிற்குள் புகுத்தப்பெற்றதாகும். இந்நாகரிகத்தைக் கொண்டுவந்த மக்கள் திராவிடர்களாக இருக்கவேண்டும் என்று நம்பப்படுகிறது.

1.69 "வட இந்தியாவில் வெண்கலக் கருவி நாகரிகம் சிறப்புற்று விளங்கியமையால், திராவிடர்கள் அங்கிருந்து தென்னிந்தியாவிற்கு வந்திருக்க இயலாது. ஏனெனில், திராவிடர்கள்வட இந்தியாவிலிருந்து அல்லதுவட இந்தியாவின் வழியாக வந்திருந்ததால் தங்களுடைய இரும்புக் கருவி களோடு, அங்குச் சிறப்புற்று காளங்கிய வெண்கலக் கருவி களுள் சிலவற்றையாகிலும் தங்களுடன் கொண்டு வந்திருப்பர். அவ்வாறு வெண்கலக் கருவிகளைக் கொண்டுவராமையால் அவர்கள் கடல்வழியாகவே தக்கணத்தில் நுழைந்திருக்க வேண்டும். பின்னர், இந்தியாவின் மேற்குக் கடற்கரையோரமாக அவர்கள் தெற்கு நோக்கிப் பையப்பையச் சென்றிருக்கவேண்டும். இந்தப் பெருங்கற்படைச் சமாதிகளுக்கும் நடு நிலக்கடற் பகுதியில் காணப்பெறும் பெருங்கற்படை சமாதிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதை நாம் காணுகின்றோம். பல

வகையான ஒப்புமைப் பண்புகளுள் முதன்மையானதும் நம்முடைய கருத்தைக் கவருவதுமாக இருப்பது கப்பற் சாளரங்களோடு கூடிய கற்பலகைகளால் மூடப்பெற்ற கல்லறைகளாகும். இதனால், இந்தப் பண்பாட்டிற்குரிய திராவிடர்களுக்கும் நடு நிலக்கடலினத்து மக்களுக்கும் தொடர்பு இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. இவ்விரு நாடுகளிலும் காணப்பெறும் ஒரேவகையான பண்பாட்டிற்குரிய மக்கள் ஓரினத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும் என்று கருதுவது தவறாகாது. அவர்கள் கடல் வழியாகத் தென்னிந்தியாவிற்கு கி.மு. முதலாயிரத்தின் இடைப்பகுதியில் வந்திருக்கலாம். அல்லது அவர்கள் ஈரானிலிருந்து பலூசிஸ்தானத்தின் மூலம் நிலவழியாக இந்தியாவிற்குள் நுழைந்து, மைசூர் மேட்டு நிலத்தை அடையும் வரை மேலைக்கடற்கரையோரமாகத் தென்னாட்டிற்குள் சென்றிருக்கலாம்."[58] இக்கருத்து இன்றைய அறிஞர்கள் பலருடைய கருத்தினைக் கவர்ந்திருக்கிறது.

(iv) மொழியியல் அறிஞரின் நம்பிக்கை

1.70 முப்பது ஆண்டுகளுக்கு மேல் திராவிட மொழிகளுக்கும் பாஸ்க்கு (Basque) முதலிய தெற்கு ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகளை டாக்டர் என்.லகோவரி (Lahovary) என்ற ருமேனிய நாட்டு அறிஞர் ஆராய்ந்துள்ளார். அவர், "நடுநிலக்கடற் பகுதியிலேயே உலகத்தின் முதல் நாகரிகங்கள் அரும்பின; கி.மு. நாலாயிரம் அளவில் அவை மலர்ந்து மணம் பரப்பின; திராவிடர்களின் மூதாதையரும் கி.மு. நாலாயிரம் அளவில் மெசப்டோமியாவிலிருந்து வெளியேறிப் பையப்பைய இந்தியா வரையில் சென்றிருக்கலாம் என்ற நம்பிக்கை எனக்குண்டு "[59] என்று கூறுகிறார்.

---

58 Haimendorf, F.C. "New Aspects of the Dravidian Problem," cf. Tamil Culture, Vol. 11 No 21 pp. 127–135.

59 Lahovary, N.: Dravidian Origins and the west, Orient Longmans, Madras, 1963; P. 16.

(v) பல்லமைப்பு உணர்த்தும் உண்மை

1.71 இனங்களின் தோற்றம் ' என்ற சிறப்புமிக்க ஆராய்ச்சி நூலின் ஆசிரியரான, பேராசிரியர் சி. கார்லதன் கூன் (C. Carleton Coon)பலவகையானகாரணங்களைக்காட்டி,திராவிடர்நடுநிலக் கடற்பகுதிக்குரிய 'காகேசிய' (Caucasoid) இனப்பிரிவைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்தினை நிலைநாட்ட முயன்றுள்ளார். இவ்வினத்தைச் சேர்ந்த மக்களுடைய பல் அமைப்பு வடிவத்தாலும், வண்ணத்தாலும், உறுதியாலும் ஒற்றுமையுடையதாகக் காணப்படுகிறது. காகேசிய இனத்தில் ஐரோப்பியர், அண்மைக் கிழக்கினர், தமிழர் முதலியோர் அடங்குவர் என்பது அவருடைய ஆய்வுரையால் தெரியவருகிறது.[60]

(vi) மதிப்பீடு

1.72 இவையாவும் திராவிடர்கள் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் என்னும் கருத்தைத் தெரிவிக்கின்றன. இவற்றுள் 'திராவிடர்கள் நடுநிலக்கடல் இனத்தைச் சேர்ந்தவர்கள்' என்னும் கருத்தினை நிலைநாட்ட மானிடவியல், இனமரபியல், தொல் பொருளியல், மொழியியல் ஆராய்ச்சியாளர்கள் பெரிதும் முயன்றுள்ளனர் என்பதை நாம் அறிகிறோம். அவர்களுடைய அறிவுத் திறனும், ஆராய்ச்சி முறையும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. அவர்களுக்கு நம்முடைய வணக்கத்தைச் செலுத்தி, அவர்களுடைய கருத்துகளை இனி நாம் ஆராயலாம்.

1.73 பண்டைச் சுமேரியரோடு திராவிடரைத் தொடர்பு படுத்தி உரைப்பவர்களே, திராவிடர் எகிப்திலிருந்து வந்தவர் என்று கூறுகின்றனர். எகிப்து, மெசபடோமியா போன்ற பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பெற்றுள்ள பல தொல்பொருள் சின்னங்கள் இந்தியாவின் தொல்குடிகளான திராவிடருடைய பெருங்கற்படைச் சின்னங்களோடு பெரிதும் ஒத்திருத்தலால் அவர்கள் இவ்வாறு கருதுகின்றன்ர்.

---

60 Coon, Carleton. C.: Origin of Races, A. Knopo; N. Y.,1963. P. 354;

1.74 திராவிடர்கள் சித்திய மொழி பேசும் மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்னும் கருத்து இக்கால இனமரபியல், தொல் பொருளியல், மொழியியல் ஆராய்ச்சிகளால் பொய்யாய்ப், பழங்கதையாய்ப் போய்விட்டது. 'சித்திய மொழி இனம் என்று கூறுவதே ஒரு கற்பனை ' என்பது மொழி இயல், மானிடவியல் ஆராய்ச்சியால் புலனாகின்றது.[61]

1.75 மற்றும் மேற்காசியாவிலிருந்தும் நடுநிலக் கடற் பகுதியிலிருந்தும் திராவிடர்கள் இந்தியாவிற்கு வந்தனர் என்று சொல்லப்படும் கருத்தினை மறுப்பவருமுண்டு. இந்தியாவிலிருந்து தொல்பழங்காலத்திலேயே அந்நாடுகளில் திராவிடர்கள் குடியேறினார்கள் என்று நாம் ஏன் கொள்ளக்கூடாது ? இந்தியாவிற்கு வந்தார்கள் என்பதற்குரிய சான்றுகளையே, இங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றமைக்குரிய ஆதாரங்களாகக் காட்டலாமே என்பது வேறு சில அறிஞர்களுடைய கருத்தாகும்.

(vii) ஹாலின் புத்தொளி

1.76 டாக்டர் ஹால் என்ற அறிஞர், சுமேரியருக்கும் திரா விடருக்கும் உள்ள உடற்கூற்று ஒற்றுமையைக்கொண்டு சுமேரியர் என்பார் திராவிட இனத்தைச் சேர்ந்தவர் என்றும், அவர்கள் இந்தியாவிலிருந்து பாரசீகத்தின் வழியாக டைக்கிரிஸ், யூப்பிரடிஸ் ஆறுகள் பாயும் சமவெளிக்குச் சென்று குடியேறினர் என்றும் தம்முடைய "அண்மைக்கிழக்கின் பண்டைய வரலாறு "[62] என்னும் நூலில் தெரிவித்துள்ளார்.

1.77 இக் கருத்தினை வலியுறுத்தும் வகையில் டாக்டர் மக்லீன், "பிற்காலத்தில் திராவிடர் என்ற பெயரால் சுட்டப்பெற்ற

---

61 Grierson, G. A. Op. cit. Vol. IV & P. 282.
Chase, Stuart: The Proper Study of Mankind, Phoenix House, London 1965., p. 117.

62 Hall, H.R.: The Ancient History of the Near East, Methuen & Co; London, 1962., pp. 173–174.

மக்களினத்தவர் சிந்துவெளியில் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் ஒரு பிரிவினர், கடல்வழியாகவும், நிலத்தின் வழியாகவும் மேற்கு நோக்கிச் சென்றனர். கீழை பாபிலோனியாவில் உள்ள சூமர் மாநிலத்தில் அவர்கள் நிலையாகத் தங்கி வாழ்ந்தனர். அப்பொழுது அவர்கள் சுமேரியர் என்ற பெயரைப் பெற்றனர். முதலில் அவர்கள் புனித பூமியான பாலஸ்தீனம் எருசலேம் வரையிலும், அங்கிருந்து ஆப்பிரிக்காவிற்கும் நாகரிகத்தைப் பரப்பினர் என்று கருதலாம். இதை மறுப்பதற்குத் தக்க காரணங்களில்லை "[63] என்று அறிவித்துள்ளமை இங்கு ஒப்புநோக்கத் தக்கதாகும்.

1.78 வரலாற்றுக் காலம் நெடுக, இந்தியாவிற்கு வெளியே இருந்து அயலார் படையெடுத்து வந்ததைக் காணுகிறோமே யொழிய, இந்தியாவில் உள்ள மக்கள் வடமேற்குக் கணவாய் வழியாக மேலை நாடுகளுக்குச் சென்று குடியேறியுள்ளனர் என்பதற்குச் சிறிதும் ஆதாரமில்லை. எனவே, சுமேரியர் இந்தியாவிலிருந்து மேற்கு நாடுகளுக்குச் சென்று குடியேறிய திராவிடர் என்று கூறுவது பொருத்தமற்றதும் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு முற்றிலும் மாறானதுமாகும் என்று இந்திய வரலாற்றாசிரியர் சிலர் மறுப்பர். எனினும், இக்கொள்கை திராவிடர்கள் இந்திய நாட்டின் தொல்பழங்குடிகள் என்னும் கருத்தினை அரண்செய்வதாக உள்ளமை கருதத்தக்கது.

(viii) எய்மெண்டார்ப் கருத்துகளின் வன்மை மென்மைகள்

1.79 திராவிட இனத்தவர் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு அளவில் தென்னிந்தியாவில் குடியேறினர் என்னும் எய்மெண்டார்ப்பின் கருத்து ஆராய்ச்சிக்குரியதாகும். பிரமகிரியின் பழம்பொருள் சின்னங்களை சர். மார்ட்டிமர் வீலர் என்ற இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சித்துறையின்

63 Quarterly Journal of the Mythic Society, Vol. XIX, No, 3. P. 17.

டைரக்டர் ஜெனரல் நேரில் ஆராய்ந்தராவர். அங்குக் கிடைத்துள்ள பெருங்கற்படைப் பண்பாட்டுச் சின்னங்களில் கிடைத்துள்ள பொருள்கள் யாவும் கி.மு.200 அளவில் தென்னிந்திய மக்கள் பயன்படுத்தியவை என்று அவர் *அறிவிக்கின்றார். [64]

1.80 எனவே, பிரமகிரி தொல்பொருள் சின்னங்களைப்பற்றி இவ்விரு அறிஞர்களும் கொண்டுள்ள கருத்துகள் மாறுபட்டன வாக உள்ளன. எனினும், நாம் பிரமகிரி சின்னத்தின் காலத்தை கி.மு. 500–க்கும் 200–க்கும் இடைப்பட்டதாகக் கொள்ளலாம். இக்காலத்தில்தான் தென் இந்தியாவிற்குள் திராவிடர்கள் நுழைந்தனர் என்னும் கருத்து, கிடைத்துள்ள வேறு பல சான்றுகளுக்கு முரணாகத்தோன்றுகிறது. கி. மு. 500 அளவில் திராவிடர்கள் இந்தியாவிற்கு வந்தனர் என்றால், இன்றுவரை போற்றப்பட்டுவரும் வரலாற்று முறையை முதலில் மாற்றியமைக்கவேண்டும். ஆரியர் இந்தியாவிற்கு வந்தது கி.மு. 2000 அளவில் என்பதை வரலாற்று அறிஞர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.[65] ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தபொழுது இந்நாட்டில் வாழ்ந்த மக்கள் திராவிடர், ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள், முண்டர்கள் முதலியோராவர். ரிக்கு வேதத்தில் இருபது திராவிடமொழிச் சொற்கள் இடம் பெற்றிருப்பதை டாக்டர் பர்ரோ (T. Burrow) சுட்டிக்காட்டியுள்ளார்.[66] கி.மு.500 அளவில் திராவிடர்கள் இந்தியாவிற்கு வந்தனர் என்றால், ஆரியருக்குப் பின்பு, நெடுங்காலம் கழித்துத் திராவிடர்கள் இந்தியாவிற்கு வந்தனர் என்று பொருள்படும். இது வரலாற்று நிகழ்ச்சிக்கு மாறுபட்ட வரலாற்று வழுவுடையதாகும்.

1.81 கி.மு மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகனின் கல்வெட்டுகள் தென்னாட்டில் சேர, சோழ, பாண்டியருடைய

---

64 Ancient India, No 4: pp. 180 ff. (especially p. 202)
Indo–Asian Culture, January, 1954, p. 238–47.

65 Majumdar, R. C.: The Vedic Age, p. 206.

66 Burrow, P.: The Sanskrit Language, Faber, London, 1954, P.387.

ஆட்சியைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. நாடோடிகளாக இருந்த மக்கள், நிலைத்து வாழத் தொடங்கி நாகரிகத்தில் சிறப்புற்று விளங்கக் குறைந்தது ஆயிரம் ஆண்டுகளாகிலும் தேவைப்படுவதைப் பிறநாட்டு வரலாறுகளும் எடுத்தியம்புகின்றன. தமிழகத்தில் மூவேந்தருடைய ஆட்சி கி.மு. மூன்றாம் நூற்றாண்டு அளவில் சிறப்புற்று விளங்கியது என்றால், அதற்கு முன்னர் பல நூறு ஆண்டுகள் தமிழருடைய நாகரிகம் வளர்ச்சியுற்றிருக்கவேண்டும் என்பதை நாம் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை. கி. மு. 500 அளவில் திராவிடர்கள் தென்னாட்டிற்கு வந்தனர் என்பது மெய்ம்மையானால், 'இரு நூறு ஆண்டுகளாகிய மிகக் குறுகிய காலத்தில் தமிழினம் நாகரிகத்தில் சிறப்புற்றிருக்கமுடியுமா? சிறந்ததோர் இலக்கிய வளர்ச்சியைத் தமிழ்மொழி அடைந்திருக்கமுடியுமா?' என்னும் ஐயங்கள் உலக வரலாற்றை அறிந்தவர்களிடத்து எழாமற் போகா.

1.82 "ஆரியர்கள் வட இந்தியாவிற்கு வந்த பின்னரே, கிழக்கு ஈரானிலிருந்து திராவிடர்கள் தென் இந்தியாவிற்குள் நுழைந்தனர் என்னும் எய்மெண்டார்ப்பின் கருத்து பல்வேறு காரணங்களினால் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு முரண்பட்டதாகத் தோன்றுகிறது. நாம் இந்தியாவின் பெருங்கற்படை நாகரிக மக்கள் நடுநிலக்கடல் சேர்ந்தவர்கள் என்பதை வேறுவகையில் நிலைநாட்டலாம். திராவிட மொழிகளின் எண்ணுப் பெயர்களும் மூவிடப் பெயர்களும் பேரளவிற்கு அமிதோ–செமிடிக் (அல்லது சில ஆப்பிரிக்க மொழிகளோடும், பாஸ்க்) மொழிகளோடும் நெருங்கிய ஒற்றுமையுடையனவாகக் காணப்பெறுகின்றன. ஆனால், அவற்றிற்கும் சுமேரியமொழிக்கும் இடையே மிகமிகக் குறைந்த அளவே ஒற்றுமைப் பண்புகள் உள்ளன. இதனால், நெடுங்காலத்திற்கு முன்பே திராவிடர், மெசபடோமியாவின் 'அமிதோ செமிடிக் மக்களின் மூதாதையரோடு நெருக்கமான தொடர்புடன் வாழ்ந்திருக்கவேண்டும் என்பதும், ஆனால்,

சுமேரியர் அங்கு வருவதற்கு முன்னரே அவ்விடத்தை விட்டுத் திராவிடர் புறப்பட்டு விட்டிருக்க வேண்டும் என்பதும் புலனாகின்றன"[67] என்று லகோவரி கூறும் கருத்து இங்குச் சிந்திக்கத்தக்கது.

1.83 திராவிடர் மேற்குக் கடற்கரையோரமாகத் தென்னிந்தியாவிற்குள் நுழைந்தனர்; அவர்கள் வட இந்தியாவில் குடியேறாது தென்னாட்டிலேயே முதன்முதல் நிலைத்து வாழத்தொடங்கினர் என்னும் கருத்து, உண்மைக்கு மாறானதாகும். வேதகால வடமொழி இலக்கியங்களுள், வட இந்தியாவில் வாழ்ந்த பழங்குடி மக்களைப் பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன. நிஷாதர்கள், விராடியர், தஸ்யூக்கள் என்னும் பல பெயர்களால் அவர்களை ஆரியர் சுட்டியுள்ளனர். அப் பெயர்களுக்கு உரியவர்களுள் திராவிடர்களும் ஒருவராவர். பிற்கால சமஸ்கிருதமொழி நூல்களுள் 'திராவிடர்' என்னும் சொல்லாட்சியும், அவர்களுடைய நாகரிகத்தைப் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றிருப்பதை நாம் எளிதில் புறக்கணித்து விடமுடியாது. காத்தியாயனர் சோழ, பாண்டிய மன்னர்களைப் பற்றிப் பேசுகிறார் (பாணினீயம், IV. i. 168, 175 உரை). மகாபாரதத்திலும், மனுதரும சாத்திரத்திலும் திராவிடரைப் பற்றிய குறிப்புகள் காணப்பெறுகின்றன. இவை யாவற்றையும்விட மொகஞ்சொதாரோ, ஹரப்பா பகுதிகளில் சிறப்புமிக்க நாகரிக நிலையில் வாழ்ந்த மக்களுள், ஒரு பகுதியினரேனும் திராவிடர்களாக இருந்திருக்கவேண்டும் என்பதை மறுக்க இயலாது. எனவே, ஆரியருக்கு முன்பே வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் திராவிடர்கள் வாழ்ந்திருக்கவேண்டும் என்று கருதுவதற்கு வலிமையான சான்றுகள் பல உள்ளன. அவற்றை யாரும் எளிதில் புறக்கணிக்கமுடியாது.[68] என்று டாக்டர் டி. சி. சர்க்கார் மொழிந்துள்ளமை இங்கு நினைவுகூர்தற்குரியதாகும்.

1,84 வட இந்தியாவில் திராவிட மொழிக் குடும்பத்தைச்

---

67 N. Lahovary: Op. cit. p. 370.

68 Sircar, D. C.: Studies in Society and Administration of Ancient and Medi–aeval India, Mukhopadhyay, Calcutta, 1957. pp.31–40;

சேர்ந்த திருத்தமடையாத மொழிகள் பல, பழங்குடிமக்களால் பேசப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட சில மலைப்பகுதிகளிலும் காட்டுப்பகுதிகளிலும் வாழுகின்ற நாகரிக வளர்ச்சியுறாத மக்களால் அவை பேசப்பட்டு வருகின்றன. மொழியியல் பேராசிரியர் டாக்டர் எமனோ (Murray B. Emeneau) அம்மொழிகளை ஆராய்ந்துள்ளார். வட இந்தியாவிலும் நடு இந்தியாவிலும் மட்டும் திராவிட மொழிகள் வழங்கி வருகின்றன. அவற்றுள் பீகாருக்கும் வங்காளத்திற்கும் இடையில் உள்ள காடுகளிலும் மலைகளிலும் கூய், கூவி, குரூக், மால்ட்டோ (இராஜ்மகால்) என்னும் மொழிகள் பெருவழக்காக உள்ளன. இத்தகைய மொழிச் சின்னங்கள் வட இந்தியாவில் இன்றுவரை நிலைத்த வாழ்வைப் பெற்றிருக்கின்றன. இவையனைத்தும் தொல்பழங்காலத்தில் திராவிடர்கள் தென் இந்தியாவில் மட்டும் அல்லாமல், வட இந்தியாவிலும் வாழ்ந்திருக்கவேண்டும் என்ற உண்மையை உணர்த்துகின்றன.[69]

1.85 சென்னைப் பல்கலைக் கழகத்தின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறைத் தலைவராக விளங்கிய டாக்டர் டி. வி. மகாலிங்கம் அவர்கள், டாக்டர் எய்மெண்டார்ப் வெளியிட்டுள்ள ஆராய்ச்சிக் கருத்தினை மதிப்பீடு செய்கின்றவகையில் 'தென்னிந்தியாவில் தொல்பொருள் ஆராய்ச்சி' என்னும் கட்டுரையை வரைந்துள்ளார். அதில், "பிரமகிரியில் கண்டெடுக்கப்பெற்ற படிவுப் பொருள்களைக் கொண்டு கிறித்தோபர் பியூரர் எய்மெண்டார்ப் இந்நாகரிகத்தினை உருவாக்கிய மக்கள் திராவிடர்களாக இருக்கலாம் என்றும், அசோகனின் காலத்திற்கு முன்பு, அதாவது கி.மு. 700–க்கும் கி.மு. 400–க்கும் இடையில் தென்னிந்தியாவினுள் அவர்கள் குடியேறியுள்ளனர் என்றும் அவர் கருதுகிறார். கிறிஸ்துவ ஊழியுள் முதலிரு நூற்றாண்டுகளில் சீரும் சிறப்பும் பெற்று, இலக்கியவளத்துடன் திகழ்ந்த தமிழ்மொழி, பெருங்கற்படை

69 Vide: Proceedings of the American Philosophical Society, Vol. 98; No. 4. August 16, 1954, P. 287.

சமாதி நாகரிகக்காலத்திய மக்களிடையே திருத்தம் பெறாத குழுவின (patois) மொழியாக வழங்கி இருக்கவேண்டும் என்பது இங்கு நினைவு கூர்தற்குரியதாகும். எனவே, தொல்பழங்காலத் தமிழ்மொழி, 'செந்தமிழ்' மொழியாக வளர்ச்சி அடைவதற்குச் சில நூற்றாண்டுகளாகிலும் தேவைப்பட்டிருக்கும். இக்காரணத்தினால், பெருங் கற்படை சமாதி நாகரிகத்தின் தொடக்க காலத்தை இன்னும் சிறிது முற்பட்ட காலமாக, அதாவது கி. மு. 1000 என்ற அளவிற்காகிலும் தள்ளமுடியாதா என்பதை முக்கியமாக நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம்"[70] என்று அவர் தெரிவித்துள்ள கருத்து, இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாய்வினால், எய்கண்டார்ப்பின் கருத்து முடிந்த முடிவாகக் கொள்ளத்தக்கது அன்று என்பதும், வருங்காலத்தில் தொல்பொருள் ஆராய்ச்சியால் வெளிப்படும் ஒளியைக்கொண்டுதான் திராவிடரின் தாயகத்தைப்பற்றித் துணிந்து கூற இயலும் என்பதும் புலனாகின்றன."

(ஆ) இந்தியாவின் பழங்குடி மக்களே திராவிடர்

1.86 சென்ற நூற்றாண்டின் இறுதியிலும், இந்நூற்றாண்டின் தொடக்கத்திலும் மேலைநாட்டு அறிஞர்களுள் பலர், மக்களினம் தோன்றிய உலகத்தின் பகுதிகளுள், தென்கிழக்கு ஆசியப்பகுதியும் ஒன்றெனக் கூறியுள்ளனர்.

(1) லெமூரியா அல்லது குமரிக்கண்டம்

1.87 ஸ்காட் எலியட் (Scott Elliot) என்ற அறிஞர் 'அழிந்துபோன லெமுரியா' என்னும் நூலில், "ஆப்பிரிக்கா கண்டம் முதல் ஆஸ்திரேலியா வரையிலும், விந்தியம் முதல் கிழக்கிந்தியத் தீவுகள் வரையிலும் பரந்ததொரு நிலப்பரப்பு அமைந்திருந்தது. அங்கு மனிதனைப் போன்ற குரங்குகள்

70 Journal of Madras University, Sect. A. Humanities Centenary Number, 1957; P. 148.

பேரளவில் இருந்தன. அவற்றை 'லெமூர்' (Lemur) என்று ஸ்கிலேட்டர் (Sclater) குறிப்பிடுவதனால் அவை வாழ்ந்த நாட்டை 'லெமூரியா' என்ற பெயரால் அழைக்கலாம்" என்று அவர் குறிப்பிடுகிறார். அந்நிலப்பரப்பு தெற்குப் பெருங்கடலில் இருந்தது என்றும், அங்குதான் முதன்முதல் மனித இனம் தோன்றியிருக்கவேண்டும் என்றும் அவர் பல சான்றுகள் காட்டி நிறுவியுள்ளார்.[71] அவருடைய கருத்தை அரண்செய்யும் வகையில் சர் வால்டர் ராலே (Sir Walter Raleigb), லெமூரியாவே மக்களினம் தோன்றிய முதல் நிலப்பரப்பு என்னும் கருத்தினை நிலைநாட்ட முயன்றுள்ளார். கடல்கோளினால் அந்நிலப்பரப்பு அழிந்தபொழுது, அங்கிருந்த மக்கள் இந்தியாவின் எஞ்சிய பகுதியில் குடியேறினர் என்பதற்குப் பல ஆதாரங்களை அவர் காட்டியுள்ளார்.[72]

1.88 பேராசிரியர் ஹெய்க்கல் (Haekel) என்பார் "படைப்பின் வரலாறு" (History of Creation)என்னும் நூலிலும், 'மனித இனத்தின் மரபுக் குடிவழி' என்னும் நூலிலும் இந்தியப் பெருங்கடல்களிலிருந்து ஆசியக் கடற்கரை வழியாக ஆப்பிரிக்காவின் கீழைக் கரைவரையிலும் ஒரு பெருநிலப்பரப்பு இருந்தது என்பர். இந்த நிலப்பரப்பின் ஒரு பகுதியில்தான் மனிதன் தோன்றியிருக்க வேண்டும் என்னும் கருத்தை அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார். [73]

1.89 இக்கருத்துகளின் வன்மைமென்மைகளை ஆராய்ந்து சர் ஜான் எவான்சு (Sri Jhon Evans) கடல் கொண்ட லெமூரியா நாட்டைப் பற்றிய செய்திகளை உடன்படுவதோடு, தமக்குக் கிடைத்த பலவகையான சான்றுகளாலும் தென்னிந்தியாவே மனித இனத்தின் மூலத் தாயகமாக இருக்கவேண்டும் என்று தாம் நம்புவதாகத் தெரிவித்துள்ளார்."[74]

---

71 Elliot, Scott: Lost Lemuria, Manchet, 1915., pp. 23.35.

72 Raleigh, Sir Walter: History of the World, Clarendon, 1916, P. 66.

73 Haekel: (1) History of Creation, Vol. 1; p. 361; Vol. II, PP. 325–26; (2) The Pedigree of Man, Methuen, 1918., P. 173.

74 Evans, Sir John: The Home of Mankind in the "Science of Man", August,

1.90 மண்ணியல் ஆராய்ச்சியில் ஈடுபட்ட அறிஞர் சிலரும். 'லெமூரியா ' என்னும் நிலப்பரப்பு கடலில் மூழ்கிய பின்னர் இந்தியநிலப்பரப்பில்உண்டானமாற்றங்களைச்சுட்டுகின்றனர். அந்நிலையில் மனித இனம் அக்கடல்கொண்ட நிலப்பரப்பின் ஒரு பகுதியாகிய தமிழகத்தில் தோன்றி இருக்கவேண்டும் என்ற கருத்தினைத் தெளிவுறுத்தியுள்ளனர்.

1.91 "தென்னிந்தியா, கங்கை ஆறு பாயும் நிலப்பரப்பிற்கும் இமயமலைக்கும் மண்ணியல் அடிப்படையில் வேறுபட்டது. இப்போது இந்தியப் பெருங்கடல் இருக்கின்ற இடத்தில், ஆப்பிரிக்கா வரையிலும் தொடர்ச்சியாக நீண்டிருந்த பழைய கண்டத்தின் எஞ்சிய பகுதி தென்னிந்தியாவாகும். இதன் கண்ணுள்ள பாறைகளும் குன்றுகளும் உலகத்திலுள்ள மிகப் பழைய பாறை அமைப்பைச் சார்ந்தன. இக்குன்றுகளின் பலவிடங்களில் கருங்கற்பாறை படிவுப்பாறையாகப் பரவி இருக்கின்றது. ஆகையால், உலகில் தொல்பழங்காலத்தில் உயிர்கள் தோன்றுவதற்கு முன்னர் அது எவ்வாறு இருந்ததோ, அவ்வாறே தெற்கில் இன்று வரை இருந்து வருகின்றது. சிந்து கங்கைச் சமவெளி, சிந்து ஆறு முதல் கங்கைக் கழிமுகம் வரையில் ஆயிரத்து இருநூறு கல் இடைவெளியின்றி நீண்டிருக்கிறது. மண்ணுலகு பதப்பட்டுக்கொண்டு இருக்கும்போது–இமயமலை கிளம்பும் முன்னர் கங்கையாற்று வெளி இருக்குமிடம் கடலாயிருந்தது. இமயமலை கிளம்பிய போது கடல் மறைந்தது. இம் மலையிலிருந்து ஓடிவரும் ஆறுகள் வாரிக்கொண்டு வந்த வண்டல் மண்ணினால் இப்போதுள்ள சமவெளி உண்டாயிற்று"[75] என்று மண்ணியல் ஆராய்ச்சியாளர் அறிவித்துள்ளனர்.

1.92 இக்கருத்துகள் அனைத்தும் திராவிடர்கள் தமிழகத்தின் தெற்கே இருந்த நிலப்பரப்பு ஒன்றில்

1901., pp. 18–37.

75 Holderness, J. W.: Peoples and Problems of India, London, 1901; pp. 23–24,

தோன்றியவர்கள்; அந் நிலப்பரப்பு பெருவெள்ளத்தினால் கடலினுள் மூழ்கியபொழுது, அவர்கள் வடக்கு நோக்கிக் குடியேறினர்; அவ்வாறு அவர்கள் குடியேறிய பகுதி இன்றைய தமிழகத்தின் தெற்குப்பகுதியாகும் என்பதைத் தெரிவிக்கின்றன. இக்கருத்துகளை வெளியிட்ட அறிஞர்கள் வெறும் இலக்கிய ஆராய்ச்சியாளர்களோ வரலாற்றாசிரியர்களோ அல்லர்; தங்களுடைய காலத்தில் சிறப்புமிக்க மண்ணியல் ஆராய்ச்சியாளர்களாகவும் (Geologists) இனமரபியல் அறிஞர்களாகவும் (Ethnologists) மானிடவியல் வல்லுநராகவும் (Anthropologists) அவர்கள் விளங்கினர் என்பதை நாம் நினைவு கூர்தல் வேண்டும்.

1.93 இந்தியாவின் பண்டைக்கால வரலாற்றிலும் சிந்துவெளி நாகரிகத்தைப்பற்றிய ஆராய்ச்சியிலும் சிறப்பாகப் பேர் ஈடுபாடு கொண்டு விளங்கிய திருத்தந்தை ஈராசுப் பாதிரியார் தமிழருடைய தோற்றத்தைப்பற்றியும் ஆராய்ந்துள்ளார். " லெமூரியா எனப்படும் நாட்டில் தோன்றிய மக்கள் இந்நாடு கடல்வாய்ப்பட்ட பொழுது சிதறுண்டு வேறு பல திசைகளில் சென்று அங்கங்கே தங்கி வாழ்ந்தனர். ஆப்பிரிக்காவில் சிதறுண்டு தங்கியவர் 'ஆப்பிரிக்கர்' என்றும், இந்தியாவைச் சேர்ந்தவர் 'திராவிடர்' என்றும், ஜாவா, சுமத்திரா வழியாகச் சீனா முதலிய பகுதிகளுக்குச் சென்றவர் மங்கோலியர் என்றும் பலவகை மக்களாக வாழ நேரிட்டது. இந்த நாட்டில் நெடுங்காலம் நாகரிக வளர்ச்சி அடைந்த திராவிடர்கள் மேற்குத்திசை நோக்கிப் பயணம் செய்தனர். பல்வேறு நாடுகளில் தங்களுடைய குடியிருப்புகளை அமைப்பதில் அவர்கள் வெற்றியும் கண்டனர். மெசபடோமியாவிலிருந்து பிரிட்டிஷ் தீவுகள் வரையில் அவர்கள் பயணம் செய்ததோடு, தங்களுடைய இனத்தை மேலை நாடுகளில் பரப்பினர், பின்னர், மானிடவியல் அடிப்படையில் அவர்கள் வாழ்ந்த இடத்தின் பெயரால் 'நடுநிலக் கடலினத்தினர் என்ற பெயரையும் அவர்கள் பெற்றனர். தங்களுடைய நாகரிகத்தை இருபெருங்

கண்டங்களில் பரவச் செய்ததோடு இவ்வாறு இன்றைய உலக நாகரிகத்தினை அவர்கள் தோற்றுவித்தனர்"[76] என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.

1.94 தமிழகத்தின் தொன்மைபற்றி ஆராய்ந்த மண்ணியல் வல்லுநர்களும், தொல்பழங்கால வரலாற்றில் தேர்ச்சிமிக்க வரலாற்று ஆராய்ச்சியாளர்களும், "வட இந்தியாவில் காணப்படுவது போல் எரிகுழம்பு எழுந்து படிந்தமைக்கோ, நிலநடுக்கங்கள் ஏற்பட்டமைக்கோ அறிகுறிகள் ஒன்றும் தென்னிந்தியாவில் காணப்படவில்லை. ஆதலின், உலகம் தோன்றிய காலத்தில் குழம்பாக இருந்த மண் முதலில் குளிர்ந்து அமைந்த நிலப்பகுதி தென்னிந்தியாவாகும். இவ்விடத்தில் மனிதன் தோன்றி இருக்கலாம்"[77] குறிப்பிடுகின்றனர். இவ்வாறு பல்வேறு கோணங்களில் தமிழகத்தின் தொன்மையை – தென்னிந்தியாவின் காலங்கடந்த பழமையை – அறிஞர் பெருமக்கள் தங்களுடைய ஆராய்ச்சியின் மூலம் உலகிற்கு உணர்த்த முயன்றுள்ளனர்.

1.95 இவ்வாராய்ச்சியாளருடைய கருத்துகளை யெல்லாம் ஒனறாகக் கோவைப்படுத்திப் பார்க்கின்ற பொழுது, "லெமூரியா எனப்படும் குமரிக்கண்டமே திராவிடர்களுடைய மூலத்தாயகமாகும். நடுநிலக்கடல் இனத்தவர் என்று அழைக்கப்பெறும் அந்த இன மக்கள் இந்தியாவின் தென்பகுதியில் தோன்றியவர்களாவர். அப்பகுதி கடல்வாய்ப்பட்ட திராவிடருடைய மூலத்தாயகத்தின் ஒரு பகுதியாகும். அம்மூலத்தாயகம் கடல்கொள்ளப்பட்ட லெமூரியாவில் இருந்தது. அங்கு அரும்பிய நாகரிகமே வடமேற்கு இந்தியப் பகுதியில் சிந்துவெளி நாகரிகமாக மலர்ந்தது. மொகஞ்சொதாரோவில் வளர்ந்த திராவிடரின் நாகரிகமே நடுநிலக்கடலை அடுத்த

---

76 Horas. Rev. St. Studies in the Proto.Indo Mediterranean Culture, Vol. 1; Bombay, 1953., pp. 21.

77 Ramachandra Dikshitar, V. R.: Op. cit., p. 234.

பகுதிகளில் எகிப்திய நாகரிகம், பாபிலோனியா நாகரிகம், பொனீசிய நாகரிகம் போன்ற பல நாகரிகங்கள் தோன்றக் காரணமாக இருந்தது"[78] என்னும் கருத்துப் புலனாகிறது.

(2) கடல்கோளும் முச்சங்க வரலாறும்

1.96 தமிழகத்தின் தெற்கே இருந்த ஒரு பெருநிலப்பரப்பு கடல்கோளினால் அழிவுற்றது என்னும் மேலைநாட்டு ஆராய்ச்சியாளர்களுடைய கருத்தினைப் பழைய தமிழ் இலக்கியங்களிலிருந்து சான்றுகள் காட்டி, திராவிடர் இந் நாட்டின் பழங்குடிமக்களே என்னும் கருத்தை நிலைநாட்டத் தமிழகத்தின் மூதறிஞர்கள் பலர் முயன்றுள்ளனர்.

1.97 இன்றைய தமிழகத்தின் தெற்கே இருந்த ஒரு பெரிய நிலப்பரப்பு கடல்வாய்ப்பட்டது என்பதற்குப் பழைய தமிழ் இலக்கியத்துள் சான்றுகள் பல உள்ளன. கடல் கொண்ட தென்னாட்டைக் 'குமரி நாடு' என்று அழைத்து வருவதற்குரிய காரணத்தையும் ஆராய்ச்சியாளர்கள் விளக்கியுள்ளனர்.[79] அந் நிலப் பகுதி, பல நூறாயிரம் ஆண்டுகள் தமிழ்நாட்டின் ஒரு கூறாயிருந்து, பின்னர் பையப்பைய கடலுள் மூழ்கிவிட்டது என்பதைப் பண்டைக் காலப் புலவர்களும், பழைய உரையாசிரியர்களும்[80] தெளிவுறுத்தியுள்ளனர்.

1.98 அவற்றை ஆராய்கின்றபொழுது சில உண்மைகள் புலனாகின்றன. தமிழகத்தைக் கடல்கொண்ட மரபுவழிச்

---

78 Ibid, p. 170, Origin and Spread of the Tamils, pp. 35–36 Kazhagam, Madras, 1971.

79 கந்தையா பிள்ளை, ந. சி.: தமிழகம், பக். 1; ஒற்றுமை ஆபீசு, சென்னை, 1934.

80 இக் கடல்கோள் நிகழ்ச்சியைச் சங்க காலப் புலவருள் சிலரும், இடைக்காலத்திய உரையாசிரியர்கள் சிலரும் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கியுள்ளனர். அவர்களுடைய கருத்துகளை யாரும் எளிதில் பொய்யுரை என்று புறக்கணித்து விடமுடியாது. மறக்கமுடியாத சிறப்புமிக்க நிகழ்ச்சியாக அவர்கள் அதைப் போற்றியுள்ளனர் என்பதைப் பின்வரும் சான்றுகள் அறிவிக்கின்றன:

செய்தி யோடு, தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டிருந்த முச்சங்கங்களின் வரலாறும் இணைந்து காணப்படுகிறது. அந்நாடு "தமிழகத்தின் ஒரு பகுதி மட்டுமன்று; தமிழினம், தமிழ் நாகரிகம் ஆகியவற்றின் தாயகம் என்றே கூறவேண்டும். ஏனெனில் தமிழைத் தொன்று தொட்டு வளர்த்த சங்கங்கள் மூன்றனுள், தலைச்சங்கம், நடைபெற்ற தென்மதுரையும் இடைச் சங்கம் நடைபெற்ற கபாடபுரமும் இக் குமரிப் பகுதியிலேயே இருந்தன.

1.99 எனவே, தலைச்சங்க காலமாகிய முதல் ஊழியிலும் இடைச்சங்க காலமாகிய இரண்டாம் ஊழியிலும் இக்குமரிப் பகுதியிலேயே தமிழர் ஆட்சியும் நாகரிகமும் மொழி வளர்ச்சியும் ஏற்பட்டன என்பதும், தெற்கிலிருந்து கடல் முன்னேறி வரவர அவர்கள் வடக்கு நோக்கிப் பரந்து சென்றனர் என்பதும் விளங்குகின்றன.

1.100 தமிழ்நூல்களில் மூன்று கடல்கோள்களைப் பற்றிக் தெளிவான குறிப்புகள் காணப்படுகின்றன. முதல் கடல்

---

(1) செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீந்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" (புறம். 9)

(2) "வடவேங்கடந் தென்குமரி" (தொல்.பாயிரம்)

(3) வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி" (சிலப். 11 : 18–22)

(4) "மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார் நாடிடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்" (கலி. 104)

மேலும், இறையனார் களவியல் உரையையும் (சூ.1. உரை, பக். 8) தொல்காப்பியம் எழுத்து அதிகாரம் இளம்பூரணர் உரையையும் (சிறப்புப்பாயிரம் 4–5), சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையையும் (கா.8.1–2 உரை) காண்க.

கோளால் பஃறுளியாறும் குமரிக்கோடும் கடலால் கொள்ளப்பட்டன. பஃறுளியாற்றின் கரையிலிருந்த தென்மதுரையே பாண்டியன் தலைநகரும், தலைச்சங்கமிருந்த இடமுமாகும். இக் கடல்கோள் நிகழ்ந்த காலத்திலிருந்த பாண்டியனே 'நெடியோன்' என்று புறநானூற்றிலும், 'நிலந்தரு திருவிற் பாண்டியன்' என்று தொல்காப்பியப் பாயிரச் செய்யுளிலும் குறிக்கப்பட்டவனாவான். கடல்கோளின் பின்னர் இவன் வடக்கே போய்க் கபாடபுரத்தைத் தலைநகராக்கிக் கொண்டான். இங்கேதான் இடைச்சங்கம் நடைபெற்றது.

1.101 தலைச்சங்க நாள்களில் பஃறுளியாற்றிற்கும் குமரி யாற்றிற்கும் இடைப்பட்ட பகுதி, அளவிலும் சிறப்பிலும் பாண்டி நாட்டின் மிகச்சிறந்த பாகமாய் இருந்திருக்கவேண்டும். அது 49 நாடுகளாக வகுக்கப்பட்டிருந்ததென்றும், இரண்டு ஆறுகட்கு மிடையே 700 காவத அளவு அகன்று கிடந்ததென்றும் அறிகிறோம்.

1.102 இரண்டாவது கடல்கோளால் கபாடபுரம் கடல் கொள்ளப்பட்டது. அதன்பின் சிலகாலம் மணவூர் பாண்டியன் தலைநகராக இருந்தது. பின் மூன்றாம் முறைக் கடல்கோளால் அம் மணவூரும் குமரியாறும் அழியவே, பாண்டியன் மதுரை வந்து கடைச்சங்கத்தை நிறுவினான்.

1.103 சிலப்பதிகாரத்தில் மாடலன் குமரியாற்றில் நீராடியதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், கதை முடிந்ததன்பின் எழுதப்பெற்ற நூலினுள் 'தொடியோள் பௌவ'மெனக் குமரி, கடலாகக் கூறப்பட்டுள்ளது. இவ்விரு காலப்பகுதிகளுக்கு இடையே, அதாவது, கோவலன் இறந்த சில நாள்களுக்குப் பின்னாகக் குமரியாறு கடல் கொள்ளப்பட்டுக் குமரிக்கடலாயிற்று என்பர் பேராசிரியர்."[81]

1.104 இக்கடல்கோள்களைப்பற்றிய செய்திகள், இலங்கையின் காலவழிச் செய்திக் கோவைகளான

81 அப்பாத்துரை, கா.: குமரிக்கண்டம் அல்லது கடல்கொண்ட தென்னாடு, ப. 2–3.

தீபவமிசம், மகாவமிசம், இராசாவளி போன்ற நூல்களிலும் காணப்படுகின்றன. இந் நூல்களை ஆராய்ந்து, இலங்கையின் வரலாற்றை முறையாக முதன் முதல் எழுதிய ஜே.இ. டென்னனட்டு (Sir J. E. Tennent) என்பவர், "இந்தியாவிலிருந்து இலங்கையானது கடலோரத்தில் உண்டாகியதோர் கலக்கத்தால் கிறித்து பிறக்குமுன் 2387–ஆம் ஆண்டில் பிரிவுற்றதாகப் பௌத்தர்களால் சொல்லப்படுகின்றது. மற்றுமொருமுறை கி.மு. 504–ஆம் ஆண்டில் பாண்டுவாசா (இலங்கை அரசரில் ஒருவன்) காலத்தில் அவ்வாறே ஒரு கடல் கோள் உண்டாயிற்று. இதற்கு 200 ஆண்டுகளுக்குப் பிறகு கி.மு.306–இல் ஆட்சிபுரிந்த தேவனாம்பிரிய திஸ்ஸாவின் காலத்தில் கொழும்புக்கு அருகில் நிலமானது தன் மட்டத்தில் தாழ்ந்து கடலினுள் மூழ்கியது"[82] என்று வரைந்துள்ளார். கி.மு. இரண்டாயிரத்துக்கு முன்பு ஒரு கடல்கோளும், நூற்றாண்டில் மற்றொரு கடல்கோளும் கி.மு.ஆறாம் நூற்றாண்டில் மற்றொரு கடல்கோளும் கி.மு. நான்காம் நூற்றாண்டில் வேறொரு கடல்கோளும் உண்டாயிருக்கவேண்டும் என்பது அவருடைய கருத்து. அவ்வாறாயின் இன்றைக்கு 4300 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த முதற்கடல்கோள் இன்றைய தமிழகத்தின் தெற்கே இருந்த லெமூரியாக் கண்டத்தினை விழுங்கியிருக்கவேண்டும் என்று தமிழ்நாட்டு அறிஞர்கள் கருதுகின்றனர்.

1.105 வரலாற்று அறிஞர்கள் இக் கருத்தை ஒப்புக் கொள்ளத் தயங்குகின்றனர். லெமூரியாவைப்பற்றி இப்பொழுது நமக்குக்கிடைத்துள்ளசெய்திகள் அரைகுறையானவை;அவை சரியானவையும் அல்ல. இன்றைய தமிழ்நாட்டுக்குத் தெற்கே சிறிது அளவு நிலப்பரப்பு இருந்திருக்க இயலாது என்று கூறமுடியாது. கன்னியாகுமரிக்குக் கிழக்கே பண்டைக் காலத்தில் நிலப்பரப்பு இருந்திருக்கலாம். வரலாற்றுக் காலத்திற்குச் சற்று முன்பும், வரலாற்றுக் காலத்தின்

82 Vide: V. Kanakasabhai Pillai: Op. cit. p. 21: F. N.

தொடக்கத்திலும் நிகழ்ந்த கடல்கோள்களினால் அது கடலினுள் மூழ்கியும் இருக்கலாம். ஆனால், முத்தமிழ்ச் சங்கங்களின் வரலாற்றில் குறிப்பிடப்பெறும் கடல்கோள்களை வரலாற்றுக் காலத்தில் நிகழ்ந்தனவாகக் கொள்ளுதலே பொருத்தம் உடையதாகும்.

1.106 லெமூரியாக்கண்டம் அழிவுற்றது தொல்பழங்காலத்ததிலேயேயாகும். இந்தியத் துணைக் கண்டம் இன்றைய வடிவத்தையும், நிலையையும் பெற்றது இன்றைக்கு ஐந்து கோடி ஆண்டுகளுக்கு முன்னராகும். அக்காலத்தில் மனிதனே இம்மண்ணுலகில் தோன்றவில்லை. எனவே, வரலாற்றுக் கதிர்கள் சென்று ஒளிவீச முடியாத தொல்பழங்காலத்தில் இந்தியாவின் தென்பகுதி கிழக்கு மேற்காகப் பரந்துகிடந்த ஒரு பெருநிலப்பரப்போடு தொடர்புடையதாக இருந்திருக்கலாம். ஆனால், மனித இனம் தோன்றுவதற்கு முன்னரே இயற்கையில் உண்டான பெருமாற்றங்களாலும், கடல்கோள்களாலும் அந்நிலப்பரப்பு சிதறுண்டு போயிருக்கலாம். ஆதி மனிதன் ஜாவாவில் தோன்றியதாக நம்பப்படுகிறது. அதே காலத்தில் இந்திய தீபகற்பத்திலும் மனிதன் தோன்றியிருக்கக் கூடும். ஆனால், வரலாற்றுக் காலத் தமிழ் மக்களைத் தொடக்க காலத்திய பழங்குடிமக்களோடு தொடர்புபடுத்துவது மிகைப்படுத்திக் கூறுவதாகும்"[83] என்று அவர்கள் மொழிந்துள்ளனர்.

1.107 மற்றொரு சாரார், 'மேலே கூறிய அறிஞர்களின் கூற்றுகளையே ஆதாரமாகக் கொண்டுதான், தமிழர்களின் முன்னோர்கள் மறைந்துபோன லெமூரியாக் கண்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், வட இந்தியாவும் இமயமலையும் தோன்றுவதற்கு முன்னரே லெமூரியாக் கண்டத்தின் ஒரு பகுதியாகத் தமிழ்நாடு இயங்கி, தமிழர்களும் வாழ்ந்து வந்தார்கள் என்னும் சித்தாந்தம் செய்யப் பெற்றிருக்கின்றன.

83 Pillay. K. K.: A Social History of the Tamils, Univ. of Madras, 1969, pp.43–44.

இரண்டு தலைமுறைகளுக்கு முன்னிருந்த தமிழ் அறிஞர்கள் இவ்விதக் கொள்கைகளைக் கொண்டிருந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆனால், இன்றும் சிலர் இவைகளைக் கூறி வருவது சற்று விந்தையாயிருக்கிறது[84] என்று சாற்றுகின்றனர்.

(3) புத்தொளி

1.108 அண்மையில் யுனஸ்கோ 'பூபௌதிக ஆண்டினை' (Geo–Physical Year) 1966இல் கொண்டாடியது. அப்பொழுது இந்தியப் பெருங்கடலை ருஷியநாட்டு மண்ணியல் ஆராய்ச்சியாளர் துருவித்துருவி ஆராய்ந்தனர். அதன் பயனாகச் சில உண்மைகள் வெளிப்பட்டுள்ளன. இந்தியப் பெருங்கடலுக்குள் அடியில் ஒரு பெரிய நிலப்பரப்பு இடிபாடுகளோடு கூடிய ஊர்களுடன் மூழ்கிக்கிடப்பதையும், அது சற்றேறக் குறைய இலங்கையிலிருந்து தென் ஆப்பிரிக்கா வரையிலும், தெற்கே ஆஸ்திரேலியா வரையிலும் பரவிக் கிடப்பதாகவும் கண்டறிந்துள்ளனர். இதைப்போன்ற வேறு சில கருத்துகளும் 1969ஆம் ஆண்டு "சைன்டிபிக்கு அமெரிக்கன் (Scientific American) மார்ச்சு மாத இதழில் வெளிவந்துள்ளன. அவ்வாராய்ச்சியாளர்கள் திராவிட இனத்தின் தோற்றத்திற்குப் புத்தொளி அளிக்கத்தக்க வகையில்" பல புதிய உண்மைகளை உலகிற்கு உணர்த்துவார்கள் என்னும் நம்பிக்கையுண்டாகிறது.

(4) புது விளக்கம்

1.109 திராவிடர்கள் லெமூரியாக் கண்டத்தில் தோன்றியவர்கள் என்னும் கொள்கையை மறுப்பவர்கள் காட்டும் காரணங்களுள் முதன்மையானதாகவும், ஆராய்ச்சியாளர்கள் அனைவராலும் கருதத்தக்கதாகவும் உள்ளது ஒன்றே ஒன்றுதான். மனித இனம் (Homo sapiens) தோன்றுவதற்கு முன்னரே, லெமூரியாக் கண்டம் கடலினுள் மூழ்கிவிட்டது என்பதே அக்காரணமாகும். இக்கருத்தினை உண்மையென

---

84 சுப்பிரமணிய ஐயர், ஏ.வி.: பண்டைத் தமிழ்நாடு, எஸ்.ஆர். சுப்பிரமணிய பிள்ளை, திருநெல்வேலி: 1970 ; பக். 70.

நாம் ஒப்புக்கொள்ளலாம். ஆனால், தமிழ்நூல்கள் கூறும் ஒரு பெருநிலப்பரப்பு வரலாற்றுக் காலத்தில் கடலில் மூழ்கியிருக்கமுடியாது என்று கூறுவதற்கு இதைச் சான்றாகக் காட்டுதல் பொருந்தாது. உலகின் பல பகுதிகளில் இருந்த தீவுகள் பல அண்மைக் காலத்தில் கடலில் மூழ்கிவிட்டதை மண்ணியல் வல்லுநர் தக்க சான்றுகள் காட்டி நிறுவியுள்ளனர்.[85] எனவே இன்றைய தமிழகத்திற்குத் தெற்கே இருந்த ஒரு பெரு நிலப்பரப்பு இலங்கை வரலாற்று ஆசிரியர் கூறுவதைப் போன்று கி.மு. மூவாயிரம் அளவில் கடலில் மூழ்கியிருக்கலாம். அந் நிலப்பரப்பில் தமிழரின் மூதாதையர் தோன்றினர் என்றும், அங்கு அவர்கள் படிப்படியாக நாகரிக வளர்ச்சியுற்றனர் என்றும் நாம் கருதலாம்.

1.110 தமிழகத்தில் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மக்களுடைய வாழ்க்கையைப்பற்றி ஆராய்ந்த அறிஞர் பெருமக்கள், "தென்னிந்தியாவின் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட தொல்பொருள் சின்னங்களைக் கருத்துடன் ஆராய்வோமானால், ஓர் உண்மை எளிதில் புலனாகும். தொல்பழங்காலத்தில் இங்குச் சிறப்புற்று விளங்கிய பண்பாடு ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுகின்றபொழுது– வளர்ச்சியுறுகின்ற பொழுது –அமைதியாகப் படிப்படியாக வளர்ச்சியுற்றிருப்பதைக் காணுகின்றோம். பண்டை மக்களோடு புதிதாக இந்நாட்டினுள் நுழைந்த மக்கள் தங்கள் நாகரிகத்தைத் திணித்து, பழைய பண்பாட்டிற்குப் போழிவு உண்டாக்கியதற்கு யாதோர் அறிகுறியும் இதுவரை இங்குக் கிடைக்கவில்லை. புதிய கற்கருவிக் காலத்திய இந்தியாவின் படத்தை நாம் ஆய்ந்து பார்ப்போமானால், ஒரே வகையான பண்பாட்டை உடைய மக்கள் நாடு முழுவதிலும் நெருக்கமாக வாழ்ந்து வந்ததை நாம் காண்போம். மேலும், அம்மக்கள் இந்நாட்டின் தொல்பழங்குடிகளாகவே தோன்றுவர், பழைய தமிழ்

85 Scientific American, March, 1968, p. 16.

இலக்கியத்தில் போற்றப்பட்டுவரும் மரபும் இக்கருத்தினை அரண்செய்கிறது. தமிழ்மொழியின் மிகப் பழைய அடுக்குகளில் புதிய கற்கருவிக் காலத்திற்குரிய சுவடுகள் மிகப் பலவாகக் காணப்படுகின்றன. அதையடுத்துத் தோன்றிய இரும்புக் கருவிக் காலப் பண்பாடு அரும்பியமைக்குரிய தடயங்களையும் நாம் அவற்றில் கண்டறிய முடிகிறது"[86] என்று அறிவித்துள்ளமை இங்குச் சிந்தித்தற்குரியதாகும்.

1.111 தென்னிந்தியாவில், கற்காலத்திற்குப் பிறகு அயல் நாடுகள் பலவற்றில் காணப்படுவதைப் போன்று செம்பு, வெண்கலக் கருவிக்கால நாகரிகங்கள் தோன்றாது, நேரடியாக இரும்புக்கருவிக் கால நாகரிகமே தோன்றியது. புதிய கற்கருவிக் காலப் பழம்பொருட் சின்னங்களை ஆராய்ந்ததன் பயனாகக் கற்கருவிக்கால நாகரிகத்திற்கு எத்தகையபேரழிவும்உண்டாகவில்லைஎன்பதுபுலனாகின்றது. இவ்விரு நாகரிகங்களும் ஒன்றன்மீது மற்றொன்று படிந்தும் காணப்படுகின்றன. இரும்பினால் கருவிகள் செய்யப் பெற்ற காலத்திலும், கற்கருவிகள் புழக்கத்தில் இருந்ததை இரும்புக் காலத்தைச் சேர்ந்த கல்லறைகளில் நாம் காணுகின்றோம்.[87]

1.112 உலகச் சிறப்புமிக்க உலோகத்தொழில் கலையியல் வல்லுநரான பேராசிரியர் கௌலாந்து (Prof. M. Gowland), 'ஐரோப்பாவில் இரும்புத் தொழில் தொடங்குவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே இந்தியத் தீபகற்பத்தில் இரும்புத்தொழில் செய்யப்பட்டு வந்ததாக அறிஞர்கள் கருதுகின்றனர். அங்கு இரும்பை காய்ச்சுவதைத் தற்செயலாகவே ஆதிகாலத்திய மக்கள் கண்டறிந்து இருக்கவேண்டும். கற்கருவிக்கால மக்கள் பெரிதும் குன்றுகளிலும், மலைச்சரிவுகளிலும், வளமிக்க செறிந்த காடுகளின் ஓரங்களிலும் வாழ்ந்தனர். இரும்பினைக்

86 Srinivasa Ayyangar, P.T.: The Stone Age in India. Madras, 1926.

87 காண்க: Srinivasa Ayyangar, P. T.: Pre.Aryan Tamil Culture, Reprint from the Journal of Indian History, Vol. VII, Madras, 1924; p. 5.

கண்டறிந்த பிறகே, ஆதி மனிதர் காட்டினைத் தம்முடைய வாழ்விடமாகக் கொண்டிருக்கலாம் என்று கருதுவதே பொருத்தமாகத் தோன்றுகிறது. இரும்புக் கருவிக்கால நாகரிகமே குன்றுகளில் வாழ்ந்த மக்களைக் காடுகளில் சென்று வாழுமாறு தூண்டியது. மிகப் பழைய காலம் முதல் இரும்பைப் பயன்படுத்தி வருவதற்குரிய நம்பிக்கை இந்தியாவில் தொன்றுதொட்டு இருந்துவருகிறது. மேலும், துருப்பிடிக்காதவகையில் இரும்பைச் செய்யும் சிறப்புமிக்கதோர் முறையையும். அவர்கள் அறிந்திருந்தனர்[88] என்று இரும்புக் கருவிக்கால நாகரிகம் தமிழகத்தில் தோன்றிய வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளார். அவருடைய கூற்று, தமிழகத்தில் குறிஞ்சி நிலத்தில் நாகரிகம் அரும்பி, முல்லை நிலத்தில் போதாகி, மருத நிலத்தில் மலர்ச்சியுற்றதைக் கோடிட்டுக் காட்டுகின்றது. எனவே, பேராசிரியர் பி.தி. சீனிவாச ஐயங்கார் கருதுவதைப் போன்று இரும்புக்கருவிக்கால நாகரிகம் தமிழகத்தில் குறிஞ்சி நிலத்தின் கற்கருவிக்கால நாகரிகத்திலிருந்து படிப்படியாக வளர்ச்சியுற்றதாகக் கொள்ளுவது பொருந்தும்.[89]

1.113 இந்நிலையில், பிரமகிரி போன்ற இடங்களில் அகழ்ந் தெடுக்கப் பெற்றுள்ள இரும்புக்கருவி நாகரிகச் சின்னங்கள் நடுநிலக் கடற்பகுதியில் காணப்படும் பெருங்கற்படைச் சமாதிச் சின்னங்களுடன் ஒற்றுமையுடையனவாகக் காணப்படுகின்றனவே என்ற ஐயம் எழலாம். இச்சின்னங்களை அகழ்ந்தெடுத்த சர் மார்ட்டிமர் வீலர் கி.மு. 200 அளவில்தான் பிரமகிரியில் இரும்புக்கருவிக்கால நாகரிகம் சிறப்புற்றிருக்கவேண்டும் என்று குறிப்பிடுகிறார்.[90] இரும்புக்கருவிக்கால நாகரிகம் கி.மு.1500 அளவில்

88 காண்க: Anthropology on the March, Ed. by Bala Ratnam, Boo Centre, Madras, 1963; p. 79.

89 Srinivasa Ayyangar, P. T.: History of the Tamils, Coomara- swamy Naidu & Sons, Madras, 1929., pp. 2-3.

90 காண்க: Ancient India, No. 4, pp. 180 ff.

தொடங்கியது என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.[91]

1.114 ஆகவே, தென்னிந்தியாவில் வாழ்ந்துவந்த திராவிட இனத்தவர் கி. மு மூவாயிரம் அளவில் வாணிகத்தின் பொருட்டுக் கடல்வழியாகவும், நிலவழியாகவும் மேற்காசிய நாடுகளோடு தொடர்புகொண்டிருந்தனர் என்றும், அத் தொடர்பினால், நடுநிலக் கடற்பகுதியில் திராவிடருடைய குடியேற்றங்கள் சில அமைக்கப் பெற்றன என்றும் நாம் கருத இடமுண்டு.[92] சற்றேறக்குறைய ஆயிரம் ஆண்டுகள் அங்கு நிலைத்து வாழ்ந்த திராவிட இனத்தவருள் ஒரு குழுவினர் தங்களுடைய கருத்துகளும் கருவிகளும் நிறைந்த பண்பாட்டோடு, கிழக்கு நோக்கிப் புறப்பட்டு பையப்பைய ஈரானைக் கடந்து, இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புற வழியாக இந்தியாவிற்குள் நுழைந்திருக்கலாம். பின்னர், அவர்கள் மேற்குக் கடற்கரையோரமாகத் தென்னிந்தியாவை அடைந்தனர் என்று நாம் கூறலாம். அந்நிலையில் தங்களுடைய நாகரிகத்தோடு நெருங்கிய தொடர்புடைய திராவிட மக்களுடன் நடுநிலக்கடற்பகுதியிலிருந்து புதிதாக வந்தேறிய திராவிட இனத்திளர் இரண்டறக கலந்துவிட்டனர் என்று கூறினால், அது தவறாகாது.

---

91 Lucas, Henry S.; A Short History of Civilisation, p. 45; McGraw Hills, N. Y., 1943.

92 93. தென்னிந்தியாவில்தான் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே இரும்பு பயன்படுத்தப் பெற்றுள்ளது. வட இந்தியாவில் கி. மு. 1000 அளவிலேயே இரும்பு பயன்படுத்தப் பெற்றதாகத் தெரிகிறது. காண்க: Bruce Foot: Pre–historic and Proto. historic Antiquities of South India, pp. 23–28.. Madras, 1916.

D. H. கார்டன் (Gordon) என்பவர், The Pre–Historie Background of Indian Culture' என்னும் நூலில் இந்தியாவிற்கும் நடுநிலக் கடற்பகுதிக்கும் நெருங்கிய வாணிகத்தொடர்பு இருந்து வந்ததையும். கி.மு. ஆயிரத்திற்கு முன்பே இந்தியாவின் மேலைக்கடற்கரைப் பகுதிகளிலிருந்து தெற்கு அரேபியாவிற்கு அடிக்கடி மரக்கலங்கள் சென்று வந்ததற்குரிய சான்றுகளையும் தெளிவாகக் காட்டியுள்ளதைக் காண்க.

1.115 இவ் விளக்கத்தின் அடிப்படையில் நோக்கினால், திராவிடர் இனத்தின் தோற்றம் ஒரு மறைபொருளாகப் புதிராக இருந்துவரும்நிலை மாறிவிடும். அவர்கள் இந்நாட்டின் பழங்குடிமக்களே என்ற கருத்து வலியுறும். வருங்காலத்தில் நடைபெறக்கூடிய ஆராய்ச்சிகளால் இக்கருத்து உறுதிப்படுமென நான் நம்புகின்றேன்.

☆☆☆☆

நூலாசிரியரின் நூல்கள்

தமிழ் இணையக் கல்விக்கழக மின்நூலகம் – தமிழிணையம் – இணையத் தளத்தில் [https://www.tamil/digitallibrary.in] புத்தகங்களைக் காணலாம்.

(அ) வரலாற்று நூல்கள்:

1. சிந்துவெளிதரும்ஒளி,வள்ளுவர்பதிப்பகம்,புதுக்கோட்டை, 1959.
2. வரலாறும் வாழ்வும், மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
3. தமிழர் நாகரிக வரலாறு முதல் பகுதி –"விடி வெள்ளி" தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1962.
4. முதலாம் இராசராசன், தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.
5. இனமரபு வரலாறு (தொல் பழங்கால வரலாறு) தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1975,
6. வரலாற்று வஞ்சி, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 1976.
7. இலங்கையில் தமிழ்ப் பண்பாடு, சேகர் பதிப்பகம், சென்னை, 1979.
8. சிந்துவெளி எழுத்து வடிவங்கள், மணியகம், சென்னை, 1981.
9. குறுநில மன்னர் வரலாறு – தமிழ்நாட்டு வரலாறு. சங்கக் காலம், பண்டைய அரசியல், தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1983.
10. Rajaraja, the Great, Madras Publications, 1984.

11. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1987.
12. Chieftains of the Sangam Age, 2001.
13. தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1994.
14. தமிழ்நாட்டு வரலாறு சங்கக்காலம்–வாழ்வியல் (நாகரிகமும், பண்பாடும்), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983.
15. History of Tamilnadu (A Birds Eye View) Authors Guild of India, 1986.

(ஆ) ஓரங்க நாடகம் :

16. அடிமை விலங்கு (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1979.
17. பொற்கொடி (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1981.

(இ) திறனாய்வும் ஆராய்ச்சியும்:

18. திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக் கழகம், 1971 (சாகித்திய அகாதெமி பரிசினை 1974–இல் பெற்ற நூல்)
19. திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும், சென்னைப் பல்கலைக்கழகம், 1973.
20. வாழ்வும் இலக்கியமும், மணியகம், சென்னை, 1978.
21. திருக்குறளும் இந்திய அறநூல்களும், மணியகம், சென்னை, 1979.
22. அறிஞர் அறவாழி, மணியகம், சென்னை, 1978.
23. சான்றோர் கண்ட திருவள்ளுவர், மணியகம், சென்னை, 1979.
24. ஒளிவிளக்கு (திருக்குறள் ஆய்வு)) பாரி நிலையம், சென்னை, 1979.
25. தமிழ் நிலவு, மணியகம், சென்னை, 1981.
26. மு.வரதராசனாரின் படைப்பு இலக்கியம், பாரி நிலையம்,1984.

27. தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம், தமிழ்க் கடல் பதிப்பகம், சென்னை, 1984.
28. தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல், சென்னை பல்கலைகழகம், 2001.
29. திரு. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியாரின் வாழ்க்கை வரலாறு, மணியகம், சென்னை, 1982.

(ஈ) உரையும் பதிப்பும்:

30. தனிப்பாடல் திரட்டு (உரையுடன்), மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
31. திருக்குறள் (கையடக்கப் பதிப்பு), வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
32. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி–3, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1977.
33. Historical Heritage of the Tamils, Vol. I. International Institute of Tamil Studies, Madras, 1983.
34. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி–1 (பதினெண் கீழ்க்கணக்கு), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
35. திறனாய்வு அணுகுமுறைகள் (கத.திருநாவுக்கரசு மற்றும் கு.பகவதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

(உ) தொகுப்பும் பதிப்பும்:

36. தொல்காப்பிய நூலடைவு, சென்னைப் பல்கலைக் கழகம், 1971.
37. திருக்குறள் நூலடைவு, சென்னைப் பல்கலைக் கழகம், 1972.
38. Tributes and Translations of Tirukkural, 1986.
39. Historical Heritag of the Tamils
Dr.S.V. Subramaniyan & Dr.K.D. Thirunavukkarasu IITS, Tharamani, 1985

(ஊ) தமிழாக்க நூல்கள்:

40. ஜி.எம். டிரெவெலியனின் இங்கிலாந்தின் வரலாறு, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1965,
41. வின்செண்ட் ஸ்மித்தின் ஆக்ஸ்போர்டு இந்திய வரலாறு– 3, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1967.
42. இலட்சுமிநாத பெஸ்பரூவா, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.
43. இராசாராம் மோகன்ராய், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.
44. ஜீவனானந்த தாஸ், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.

(எ) இலக்கணம்

45. எட்டாம் வகுப்பு தமிழ் இலக்கணம், பாடநூல் நிறுவனம், 1978.

தமிழில் வெளியிட்ட கட்டுரைகள்

1950 – 51

1. பனைமர நிழலில், விவேகா, சென்னை, 1950.
2. பசிப்பிணி, விவேகா, சென்னை, 1951.

1952 – 53

இலக்கியம் காட்டும் எழிலோவியம்:–

3. முல்லை சிரித்தது
4. பெண்ணா? பேயா?
5. மின்னிகரிடையான்
6. கள்வன் மகன்
7. உயிரும் உடலும் கலைமன்றம், சென்னை, 1952–53.
8. ஆன்ம நேயம்
9. மருந்து
10. பெரும்பிணி
11. பொய்யும் மெய்யும்
12. வெண்ணிலவு

1953 – 1954

13. தமிழ்நெறி, விந்தியா, பூனா, 1953
14. வள்ளைப்பாட்டு, கலைக்கதிர், கோவை, 1954.

15. போரும் காதல் வாழ்வும், விந்தியா, 1954.

16. பாரதிகண்ட தமிழ்ச் சமுதாயம், விந்தியா, பம்பாய், 1954

17. ஓங்குக நல்லது எது? திருவள்ளுவர், திருச்சி, 1954.

18. வள்ளுவர் கண்ட மகளிர், திருவள்ளுவர், திருச்சி 1954

19. திருக்குறளின் ஆசிரியர் ஒருவரா? பலரா? திருவள்ளுவர், திருச்சி, 1954.

1955 – 56

20. தமிழக வரலாற்றில் சில புதிர்கள், குருகுலம், வாலாஜாபாத், 1955.

21. மெய்ப்பாடுகளும் ஒன்பான் சுவையும், குமரி மலர், சென்னை, 1955

22. புரட்சிக் கவிஞரின் "புரட்சிக் கவி" – ஒரு திறனாய்வு, குமரி மலர், 1956

23. தமிழ்த் தென்றல், விந்தியா, பூனா, 1956.

24. வீரகாப்பியமும் கலைக் காப்பியமும், கம்பன் மலர், காரைக்குடி, 1956

1957

25. முதியோர் கல்வியும் சோசலிச சமுதாயமும், ஆதாரக் கல்வி, 1957.

26. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் யவனரா? (மூன்றுக் கட்டுரைகள்), எழில், காரைக்குடி, 1957.

27. திருக்கோவையாரின் திறம், ஞானசம்பந்தம், தருமை, 1957.

28. தமிழ் நிலவு, தமிழ்நாடு, மதுரை, 1957.

1958

29. இசுலாமியர் வளர்த்த தமிழ், சீதக்காதி தமிழ்ச் சங்க மலர், கீழக்கரை, 1958.

30. தமிழகததில் ஒரு ஹோமர், கம்பன்மலர், காரைக்குடி, 1958.

31. ரோமானியர் கண்ட தமிழகம், எழில், காரைக்குடி, 1958 (5 கட்டுரைகள்)

32. மருதனாரின் காப்பியநெறி, எழில், காரைக்குடி, 1958.

1959

33. புதுக்கோட்டை தொண்டைமான்களின் தோற்றம், அரசர் கல்லூரி மலர், புதுக்கோட்டை, 1959.

34. மனிதனும், மனச்சான்றும், எழில், காரைக்குடி, 1959

35. அறம்பிறழ்ந்த ஆட்சியாளன், கலைக்கதிர், கோவை, 1959

36. கிரேக்க நாகரிகமும் தமிழ் நாகரிகமும் (6 கட்டுரைகள்), கலைஞன் 1959.

37. தமிழகத்தின் மண்ணியல் அமைப்பு, அண்ணல் சுப்பிரமணியனார் மணி மலர், வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை 1959.

1960

38. மனிதன் – அன்றும் இன்றும், தருமச் சக்கரம், சென்னை, 1960.

39. சங்கக் காலத்தில் ஒரு வரலாற்றுப் பேராசிரியர், எழில், 1960.

40. சான்றோர் யார்?, நண்பன், திருச்சி, 1960.

41. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (10 கட்டுரைகள்) தமிழ்ச்செல்வி, புதுவை, 1960.

42. மனிதம், புதுமை, திருச்சி, 1960.

43. தமிழகத்தில் விடிவெள்ளி, குருகுலம், வாலாஜாபாத் 1960.

44. கவிஞனின் மூன்று குரல்கள், குருகுலம், வாலாஜாபாத், 1960.

1961

45. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும், காளிதாசரின் குமார சம்பவமும், குமர குருபரன், சீவைகுண்டம், 1961

46. வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி, திருவள்ளுவர், திருச்சி, 1961.

47. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (1960 வரை) தமிழ்ச்செல்வி, சிலம்பு 1, முத்து 8 முதல் 12 வரை 1961.

1962

48. பிளேட்டோ கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

49. அரிஸ்டாட்டில் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

50. கன்பூசியசு கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை 1962.

51. தமிழன் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

1963

52. வள்ளலார் காட்டிய வழி, குருகுலம், வாலாஜாபாத், 1963.

53. இலக்கியமும் வாழ்க்கையும், முக்கனி, சென்னை 1963.

54. முருகனும், முத்தமிழும், முக்கனி, சென்னை, 1963.

55. அடிகளின் அறைகூவல், குருகுலம், வாலாஜாபாத், 1963.

56. பிள்ளைத்தமிழின் அமைப்பும் அழகும், குமரகுருபரன், சீவைகுண்டம், 1963.

57. தென்னிந்தியாவும் இலங்கையும், கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1963. (நான்கு கட்டுரைகள்)

1964

58. நாகரிகமும் பண்பாடும் (5 கட்டுரைகள்), புதுமை, திருச்சி, 1964.

59. தென்னிந்தியாவும் இலங்கையும் (தொடர்ச்சி –5 கட்டுரைகள்), கலைச்செல்வி, யாழ்ப்பானம், 1964.

60. உலக நாகரிகத்தில் தமிழ்ப்பண்பாடு, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1964. (3 கட்டுரைகள்)

61. பொய்தீர் ஒழுக்கநெறி, சென்னை மாநகரத் தமிழாசிரியர் கழக மாநாட்டு மலர், சென்னை, 1964.

1965

62. தன்னுணர்ச்சிப் பாட்டு, அறுவடை, காஞ்சி, 1965.

63. நெடுநல்வாடை – திறனாய்வு: தமிழ்ச்செல்வி, புதுவை, 1965.

64. தாய்மொழியும் பிறமொழி ஆதிக்கமும், காஞ்சி, 1965.

65. சோழர் காலத்திய சமுதாயநிலை, கல்வெட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள், சென்னை, 1965.

1966

66. திருநெறி, சுத்த சன்மார்க்கம், வேலூர், 1966.

67. மெய்யுணர்வுக்காதல் நெறி, சத்தியஞானசபை, நூற்றாண்டு விழா மலர், வேலூர், 1966.

68. இன்பம், கல்வி, சென்னை, 1966.

69. தமிழ்மொழியின் நெடுங்கணக்கு, நக்கீரர் கழக ஆண்டு மலர், சென்னை, 1966.

70. திருக்குறளின் மொழியியல்புகள், பச்சையப்பன் கல்லூரி 125 ஆவது விழா மலர், சென்னை, 1966.

1967

71. தமிழக வரலாற்றின் படிப்பினைகள், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.

72. சிந்தாதிரிப்பேட்டை,கல்யாணம்மகளிர்உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.

73. பரணியின் பல்சுவை – இன்பச்சுவை, கலைஞன், திருச்சி, 1967.

74. மும்மணிகள், கலைஞன், திருச்சி, 1967.

1968

75. அச்சுப்புத்தகத்தின் தோற்றம், ஆரம்பக்கல்வி, சென்னை, 1968.

76. இந்திய நாகரிகத்தில் தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், தமிழக அரசின் வெளியீடு, சென்னை, 1968.

77. இளங்கோ கண்ட இயற்கை, தமிழகம், சென்னை, 1968.

78. வால்ட்விட்மனும் புதிய கவிமரபும், கவிதை, சென்னை, 1968.

79. இன்றைய தமிழ்க் கவிதைகளும், புதுமைப் போக்குகளும், கவிதை, சென்னை 1968.

80. கவிஞர் தமிழ் ஒளியின் புரட்சிப் படைப்பு, கவிதை, சென்னை, 1968.

81. ஆராய்ச்சி அறிஞர் சிவராசபிள்ளை, குமரிநாடு, நாகர்கோயில், 1968.

82. எல்லிஸ் கலைக்களஞ்சியம் தொகுதி 10, தமிழ்வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை, 1968

83. கல்வெட்டுகளால் அறியப்படும் சோழர் காலத்திய சமுதாய அமைப்பு, கல்வெட்டுக் கருத்தரங்கு, புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை – 1, 1968.

1969

84. உலகில் தோன்றிய முதல் நாவல், குமுதம், சென்னை, 1969.

85. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழர் நாகரிகம், மதுரை வரலாற்றுப் பேரவை மலர், மதுரை, 1969.

86. தமிழகத்தின் இசைக் கருவிகள்,குழந்தை வீணை காயத்ரி பாராட்டுவிழா மலர், சென்னை, 1969.

87. வரலாற்று வஞ்சி, மறைமலையடிகள் நினைவுமலர், நாகப்பட்டினம், 1969.

88. திருக்குறளின் தனிச்சிறப்புகள், Annals of Oriental Research சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1969.

89. நிலமும், நீரும், தமிழ் உறவு மகளிர், சென்னை, 1969.

90. திருக்குறளின் மாட்சி, மன்றம், சென்னை, 1969.

91. மன்னரை அணுகும் முறை, குறள் மலர், திருச்சி, 1969.

92. அவையும் அறிஞனும், குறள்மலர், திருச்சி, 1969.

93. திருவள்ளுவர் ஆண்டு ஈராயிரம், திருவள்ளுவர் சபை, சிந்தாரிப்பேட்டை, 1969.

94. வள்ளுவர் உலகிற்கு வழங்கும் செய்தி, திருவள்ளுவர் ஈராயிரமாண்டு விழா மலர், சென்னை, 1969.

95. திருக்குறளும் சங்க இலக்கியங்களும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969 (மலர்)

96. குறளோவியம், திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழா மலர், புதுக்கோட்டை, 1969.

97. அடிகள் கண்ட அம்பலவாணர், அருட்பெருஞ் சோதி, சென்னை, 1969.

98. சீவகசிந்தாமணி கு. மதுரை முதலியார் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலர், மாருதி பிரஸ், இராயப்பேட்டை, 1969.

1970

99. திருக்குறளும் சமண ஆகமங்களும், நல்லறம், சென்னை, 1970.

100. இந்திய நாடகக் கலையின் தந்தை டி.கே. சண்முகம் மணிவிழா மலர், சென்னை, 1970.

101. வள்ளுவர் காட்டும் பொருளியியல், இராசபாளையம் திருவள்ளுவர் மன்ற மலர் 1970.

102. சமணமும் தமிழும், தில்லித் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா மலர், தில்லி, 1970.

103. பண்டைத் தமிழ் மகளிரும் கச்சணிதலும், இரண்டாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருச்சி 1970.

104. நான்கு நாணல்கள் ஒரு மதிப்பீடு – திறனாய்வு, தமிழுறவு மலர், சென்னை, 1970.

105. தமிழக மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை, நண்பர் வட்ட மலர், சென்னை, 1970.

106. நெஞ்சுக்கு நீதி (குறள் விளக்கம்), நல்லறம், சென்னை, 1970.

107. திறந்த புத்தகம், காந்தியடிகள் நூற்றாண்டு விழா மலர், சென்னை, 1970.

108. திருக்குறளுக்கு உரைகள் வேண்டுமா? (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

109. காமத்துப்பாலின் கருத்தோவியங்கள், (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

110. புண்ணும் வடுவும் (குறளாய்வு), ஆரம்பக் கல்வி, சென்னை, 1970.

111. சங்க இலக்கியங்களில் திருக்குறள், கழகப் பொன்விழா மலர், கழகம் சென்னை –1, 1970

112. நாவலர் நற்றமிழின் காவலர், நாவலர் நெடுஞ்செழியன் பொன்விழா மலர், சென்னை –7, 1970.

1971

113. பண்டைத் தமிழ்ச் சமுதாயமும், நல்லறமும், சென்னை

1971

114. தமிழகத்தின் ஆண்டுக் கணக்குமறை, மூன்றாவது இந்தியப் பல்லைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், அண்ணாமலை நகர், 1971.

115. வரலாற்றின் எச்சரிக்கை விசய்நகர பாமினி அரசுகள், தமிழரசு, சென்னை, 1971.

116. தாய்மொழிவழிக் கல்வியே தாயகத்திற்குத் தேவை, முரசொலி, சென்னை, 08.01.1971

117. தமிழறிஞர் வி. கனகசபை பிள்ளை, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1971.

118. பழமொழிகள் உணர்த்தும் கடவுட்கொள்கை, சிதம்பரம் சிவகாசி அம்மை கும்பாபிஷேக மலர், சிதம்பரம், 1971.

119. பழமொழிகள் காட்டும் மகளிர் இயல்பு, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், சென்னை, 1971.

1972

120. வள்ளுவர் கண்ட மனிதன் – 1, தமிழியல் (JOTS) சென்னை, 1972.

121. திருக்குறளும் தம்மபதமும், தருமச்சக்கரம், சென்னை, 1972.

122. ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன், நான்காவது இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருவனந்தபுரம், 1972.

123. முப்பாலுள் முதுமொழிகள், கி.ஆ.பெ.வி. மலர், கோவை, 1972.

124. இலக்கியம் உணர்த்தும் வரலாறு, தமிழுறவு, சென்னை, 1972.

125. அறங்கூறும் அவையம், தமிழ்ப்பணி, சென்னை 1972.

126. பழமொழிகளில் பழந்தொழில், நிலவளம், சென்னை, 1972.

127. பைந்தமிழ்ப் பாவலர்: கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், 1972.

128. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் கொள்கை, திருக்கும்பாபிஷேக மலர், சபாநாயகர் கோயில், சிதம்பரம் 1972.

129. தமிழர் திருநாள், சமயம், 1972.

1973

130. கற்பனைக்கு ஒரு கவிஞரேறு, தமிழ்ப்பணி, சென்னை, 1973.

131. மூவகை மனிதர், கனகசபைப்பிள்ளை மணிவிழாமலர், சிதம்பரம், 1973.

132. மனிதனாக வாழ வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்கமலர், காஞ்சி, 1973.

133. வள்ளலாரின் வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்கமலர், காஞ்சி 1973.

134. சீவகசிந்தாமணி ஒரு காப்பியமாகுமா? திருக்கோயில், சென்னை, 1973.

135. ஊன்றுகோல் (குறள் வழிக்கதை), கரும்பு, திருச்சி, 1973

136. அழுக்காறு வேண்டாம் (குறளமுதம்), சி.ப. மலர், சென்னை, 1973.

137. பெண்வழிச் சேறல், கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், சிந்தாதிரிப்பேட்டை, 1973.

138. வள்ளுவர் கண்ட மனிதன் –2, தமிழியல், சென்னை, 1973.

139. பாரதியாரின் இலக்கியக் கொள்கை, ஐந்தாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், சென்னை, 1973.

140. திராவிட இனத்தின் தோற்றம் (ஒரு மறு ஆய்வு), தமிழாய்வு தொகுதி 2, சென்னைப் பல்கலைக்கழகம் வெளியீடு – 1973.

141. பாரதியின் இலக்கியக் கொள்கை, ஆய்வுக்கோவை தொகுதி 5, சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு, 1973.

1974

142. சும்மா, மலைச்சாரல், சோளிங்க புரம், ஏப்ரல், 1974.

143. நூறாண்டு வாழ்க – திறனாய்வு, தமிழ்ப்பணி, 1974.

144. வாணிதாசரின் வளமார் தமிழ், தமிழ்ச்சாரல், 1974.

145. கணக்காயர், ஆசிரியர் நரசிம்மன் அவர்கள் நினைவுமலர், சென்னை, 1974.

146. தமிழ் வளர்த்த பெரியார்கள், மு.சு. பூரணலிங்கம் பிள்ளை, நூலகம், சென்னை, 1974.

147. தமிழ் வளர்த்த பெரியார்கள், திருமணம் செல்லக் கேசவராய முதலியார், நூலகம், சென்னை, 1974.

148. வரலாறும், பண்பாடும், பேராசிரியர் அ.மு.ப. கருத்தரங்க மலர், சென்னை, 1974.

149. தாயா? தமக்கையா?, ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, புதுவை, 1974.

150. தமிழும் மலையாளமும், செந்தமிழ்ச் செல்வி, சென்னை, 1974.

1975

151. எழிலோவியம் காணவாரீர்.

152. தமிழிற்கு ஓர் அறண்

153. அறிஞர் அறவாழி

154. சிலப்பதிகாரத்தின் மாண்பு

155. இராசராசன் கொலைகாரனா? புலமை தொகுதி 1 பகுதி 1, சென்னை – 18, 1975.

1977

156. டாக்டர் மு.வ.வின் புதிய உலகம் திறனாய்வுக் கட்டுரைகள், அணியகம், சென்னை –30, 1977.

1978

157. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 4, ஜனவரி 1978.

158. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 5, பிப்ரவரி 1978.

159. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 6, மார்ச் 1978.

160. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 7, ஏப்ரல்1978.

161. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 8, மே 1978

162. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 9, ஜூன் 1978

163. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 10, ஜூலை 1978

164. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 12, செப்டம்பா; 1978

165. கந்தபுராணம், தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 3, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – 20, 1978.

166. நூல்அறிமுகம்–காளிதாசன்உவமைகள்,புலமைதொகுதி –4, பகுதி 3,4, சென்னை –18, 1978.

167. முக்காவல் நாடு, ஆய்வுக்கோவை தொகுதி 10, பகுதி 3, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு அண்ணாமலை நகர், 1978.

1979

168. கடவுள் நெறி, திருக்கோயில் மாலை 21, மணி 11, ஆண்டு 1979.

169. கல்லாடம் தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 4, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை 20, 1979

170. திருவள்ளுவரும் சர்வக்ஞரும், திருவள்ளுவர் 2010–ஆம் ஆண்டு மலர் பெங்களூர்த் தமிழ்ச்சங்கம், பெங்களூர் 42, 1979.

1980

171. வாணிதாசன் கவிதைகளில் படிமக் காட்சி, ஆய்வுக்கோவை12,தொகுதி1,இந்தியப்பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, அண்ணாமலை நகர், 1980.

172. பண்பாடு சமஸ்கிருத மயமாக்கப்படுதல்

173. வரலாற்றியல், ஜைன இளைஞர் மன்றம், சென்னை – 17.

174. மறுமலர்ச்சி

175. சிலப்பதிகாரத்தால் அறியப்படும் அரசியல் உறவு.

176. தமிழ் உரைநடை

177. உவமை

178. பொற்காலம்

179. பாவியலில் கற்பனை

180. கம்பனுக்கும் ஒரு தாசன் விக்ரமன் பொன்விழா மலர் 17.3.1978.

181. கல்லணையைக் கட்டியது யார்?

182. பசி

183. பகை பிறந்தெறிதல்

184. நான்கண்ட அடியாருக்கு நல்லார் – தி.க.நாராயணசாமி நாயுடு 80–ஆம் ஆண்டு நினைவு விழா மலர்.

185. நன்னூல் உரை ஆசிரியர்கள்

186. சிறுநெறி

187. அறிவு என்பது என்ன?

188. மணிமேகலை காட்டும் கடவுள் நெறி

189. சிற்றிலக்கியங்கள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை

190. தமிழரின் கலைக்கோட்பாடு, உ.த.ஆ. நிறுவனம் 9.2.87

191. மறுமலர்ச்சிப் பாடல்களில் கவிதை இன்பம்

192. முடமோசியார் – யவனரா?

193. பழியும், பாவமும்

194. வினையின் பயன்

195. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் நெறி

196. இருட்டறை

197. மதுராந்தகம்

198. குறவஞ்சி

199. திருக்குறளை வேதமாகப் போற்றுவது பொருந்துமா?

200. வேளிர்

201. மனம்

202. திராவிட மொழிகளில் நீதி இலக்கியம்

203. தேசீயம்

204. வரலாற்றுக் காலம்

205. வள்ளலார் காட்டிய வழி

206. இலக்கியப் படிமங்களில் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

207. வேதங்கள்

208. வீரயுகப் பாடல்கள்

1988

209. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, நவம்பர், 1988

210. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, டிசம்பர், 1988

211. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஜனவரி 1989

212. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, பிப்ரவரி 1989

213. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, மார்ச் 1989

214. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஏப்ரல் 1989

215. சீனாவில் சிறப்புற்ற காஞ்சி இளவரசர், தினமணி, 15.02.1989

216. மறுமலர்ச்சி இயக்கத்தின் வெற்றிமுரசு

217. பதினெண் கீழ்கணக்கின் கற்பனைவளம்

218. பழந்தமிழ்க்குடிகள், "முதன்மொழி" உலகத் தமிழ்க் கழக மாதிகை சென்னை 16.

219. ஒன்றே தெய்வம் இராமலிங்க வள்ளலார் வானொலி, ஆல் இண்டியா ரேடியோ, சென்னை –4, நாள் 7.11.71

220. A Tamil Savant From the City of Madras (8.1.1901 to 27.8.1988)

221. மறுமலர்ச்சித் தமிழ் உரை நடை

222. சித்தர்களின் மெய்ஞ்ஞானம் – உ.த.க. நிறுவனம் 8.6.1977 83–ஆம் ஆய்வுமன்ற கருத்தரங்கு

223. குறவஞ்சி

224. சான்றோர்கள் கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களும் மரபொழுங்கங்களும்

225. இந்திய நாடகக் கலையின் தந்தை

226. படிமங்கள்

....

வாழ்க்கைக் குறிப்பு

1) தோற்றம் – மறைவு	20.11.1931 - 05.05.1989
2) பிறந்த ஊர்	கருங்குழி, மதுராந்தகம் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்
3) கல்வி பள்ளிக்கல்வி	சிந்தாதரிப்பேட்டை ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, சென்னை
புதுமுக வகுப்பு	விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர், சென்னை
இளங்கலை (ஹானர்ஸ்) தமிழ் பின்னர் முதுகலை (தமிழ்)	1951–1954 பச்சையப்பன் கல்லூரி சென்னைப் பல்கலைக்கழகம், முதல் வகுப்பு, முதல்நிலை
முதுகலை வரலாறு	சென்னைப் பல்கலைக்கழகம் தனிநிலைப்படிப்பு (1956)
முதுகலை இலக்கிய ஆராய்ச்சி	"பழந்தமிழ் இலக்கியத்தில் அறம்" (ஆங்கிலத்தில்) அண்ணாமலை பல்லைக்கழகம் (1963)
மொழியியல் பெருஞ்சான்று	அண்ணாமலை பல்கலைக்கழகம் (1963)
முனைவர்பட்டம்	பேராசிரியர் மு.வரதராசனாரின்

		படைப்பிலக்கியம் ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம் 1979.
ஆசிரியர் பணி	1.	6 ஆண்டுகள், பயிற்சி ஆசிரியர், அரசர் கல்லூரி, புதுக்கோட்டை 1954 – 1959.
	2.	7 ஆண்டுகள், துணைப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை 1962–1968
	3.	2 ஆண்டுகள், முதல்வர், மணலித் தமிழ்க் கல்லூரி சென்னை 1968–1969
	4.	3 ஆண்டுகள், திருக்குறள் ஆராய்ச்சித் துறைத் தலைவர் சென்னைப் பல்கலைக்கழகம்," 1962–1972.
	5.	19 ஆண்டுகள், இணைப் பேராசிரியர் மற்றும் இயக்குநர் (ஆராய்ச்சியியல்), உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.
தெரிந்த பிறமொழிகள்		சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம்
விருதுகள்	1.	சாகித்திய அக்காதெமி விருது (1974) திருக்குறள் நீதி இலக்கியம்
	2.	தி.ரு.வி.க விருது 1985 ....

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

நூலாசிரியர், அவர் படைப்புகள்
பற்றிய இணையதளம்

இ-புத்தகத்தை வாசிக்க /
பதிவிறக்கம் செய்ய

நூலாசிரியர், அவர்
படைப்புகள் பற்றிய யூடியூப்

ISBN 978-93-48345-88-2

9 789348 345882